




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 242 14.04.2026 செவ்வாய்க்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 242 | Tuesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(14-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-1
பிறை: தேய்பிறை
திதி
துவாதசி இரவு 9.55 வரை
பிறகு திரயோதசி
நட்சத்திரம்:
சதயம் நண்பகல் 1.42 வரை
பிறகு பூரட்டாதி.
யோகம்
மரண யோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி
எமகண்டம்
காலை 9.00-10.30 மணி
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நற்செயல் |
| ரிஷபம் | விருத்தி |
| மிதுனம் | நலம் |
| கடகம் | ஜெயம் |
| சிம்மம் | தெளிவு |
| கன்னி | சாந்தம் |
| துலாம் | லாபம் |
| விருச்சிகம் | கடமை |
| தனுசு | வரவு |
| மகரம் | செலவு |
| கும்பம் | தனம் |
| மீனம் | நலம் |






# “ஹார்முஸ் வழியாக இனி எந்த கப்பலுக்கும் அனுமதி இல்லை” - ட்ரம்ப்

## கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, விலை உயரக்கூடும்!

**வாஷிங்டன், ஏப்.14:**

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஹார்முஸ் ஜலசந்தியைச் சுற்றி அமெரிக்கக் கடற்படை முழுமையான முற்றுகையைத் தொடங்கும் என்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் கூறியிருப்பதாவது: ”ஈரான் உடனான சந்திப்பு நன்றாகவே சென்றது, பெரும்பாலான அம்சங்களில் உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால், மிக முக்கியமான அணுசக்தி விவகாரத்தில் இணக்கம் ஏற்படவில்லை. எனவே,



உடனடியாகச் செயல்பாட்டுக்கு வரும் வகையில், உலகின் மிகச்சிறந்த அமெரிக்கக் கடற்படை, ஹார்முஸ் ஜலசந்திக்குள் நுழையும் அல்லது அங்கிருந்து வெளியேறும் அனைத்துக் கப்பல்களையும் முற்றுகையிடும் பணியைத் தொடங்கும்.

அனைவரும் சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். ஆனால், ஈரானோ ’கடலில் எங்கோ கண்ணிவெடிகள் இருக்கலாம்’ என்று கூறி மிரட்டல் விடுக்கிறது. அமெரிக்கா போன்ற நாடுகளின் தலைவர்கள் ஒருபோதும் இதற்குப் பணிய மாட்டார்கள். ஈரானுக்கு சட்டவிரோதமாகக் கட்டணம் செலுத்தும் சர்வதேசக் கப்பல்களை வழிமறித்துச் சோதனையிடக் கடற்படைக்கு உத்தரவிட்டுள்ளேன். அத்தகையோருக்குப் பாதுகாப்பு வழங்கப்படாது.

ஈரானியர்கள் ஜலசந்தியில் வைத்துள்ள கண்ணிவெடிகளை அழிக்கும் பணியையும் நாங்கள் தொடங்குவோம். எங்கள் மீதோ அல்லது அமைதியான கப்பல்கள் மீதோ தாக்குதல் நடத்தும் ஈரானியர்கள் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள். ஏற்கனவே சிதைந்து போயுள்ள ஈரான், இந்தச் சூழலை எப்படி முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை நன்கு அறியும். அவர்களின் கடற்படை, விமானப்படை மற்றும் ரேடார் அமைப்புகள் அனைத்தும் செயலிழந்துவிட்டன. அவர்களின் தலைவர்கள் பலர் பலியாகிவிட்டனர். இவை அனைத்தும் அவர்களின் அணுசக்தி பேராசையால் விளைந்தவை. நாங்கள் இப்போது முழுமையாகத் தயார் நிலையில் உள்ளோம். ஈரானின் எஞ்சியப் பகுதிகளை எங்களது ராணுவம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரும்” இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பு, மத்திய கிழக்கில் ஏற்கனவே தகித்துக் கொண்டிருக்கும் போர் சூழலை மேலும் சூடாக்கியுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி உலகின் கச்சா எண்ணெய் போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கு நடைபெறும் மிக முக்கியமான பாதையாகும். அமெரிக்காவின் இந்த முற்றுகை நடவடிக்கையால் சர்வதேச் சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, விலை தாறுமாறாக உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# நெல் சாகுபடி ஊக்கத்தொகை குறித்த மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டுக்கு நிர்மலா சீதாராமன் பதில்

**புதுடெல்லி, ஏப்.14:**

நெல்லுக்கு அளித்து வரும் ஊக்கத்தொகையைநிறுத்தக்கோரி மத்திய அரசு கடிதம் அனுப்பி உள்ளது என்று தஞ்சாவூரில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசி இருந்தார். இந்தநிலையில், ஊக்கத்தொகை குறித்து மத்திய அரசு அனுப்பி கடிதம் ஆலோசனைதான், கட்டாய உத்தரவு அல்ல என மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகைவழங்கவேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பான, அரசியல் உள்நோக்கம் கொண்ட, தமிழக விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு திரிபு என்பது தெளிவாகிறது.

தமிழகத்திற்கு மட்டுமல்ல, அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட தகவல், மாநில அரசுகள் வழங்கும் ஊக்கத்தொகைகொள்கைகளை தேசிய முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனையே ஆகும்.

மத்திய அரசின் இந்த ஆலோசனை, பயிர் பல்வகைப்படுத்துதலை (Crop Diversification) ஊக்குவித்தல் மற்றும்பருப்புவகைகள்,எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றில் சுயசார்பு அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் தொலைநோக்குப் பார்வையாகும். குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு (MSP) மேல் ஊக்கத்தொகை அல்லது போனஸ் அறிவிப்பது என்பது எப்போதும் மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது. அந்த அதிகாரத்தை யாரும் பறிக்கவில்லை.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தேச நலனில் அக்கறை கொண்டு ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, தங்களின் குறுகிய சுயநல அரசியல் ஆதாயத்திற்காகத் திட்டமிட்டுத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

அரசியலமைப்புச் சட்டப்படி உயர் பதவியில் இருக்கும் ஒரு முதலமைச்சருக்கு இத்தகைய நடத்தை அழகல்ல. தமிழக விவசாயிகள் தங்கள் கவலைகளையே வாக்குகளுக்காக ஆயுதமாக்கும் அரசை அல்ல, மாறாக தங்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக உழைக்கும் அரசையே எதிர்பார்க்கிறார்கள்.

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஒவ்வொரு விவசாயிக்காகவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசு சோர்வின்றித் தொடர்ந்து பணியாற்றும். இத்தகைய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பிரச்சனைகளால் நாங்கள் ஒருபோதும்பின்வாங்கமாட்டோம் என அதில் பதிவிட்டுள்ளார்.

## கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தயாரா? ஸ்டாலின் சவால்!

நெல் சாகுபடிக்கு ஊக்கத் தொகை விவகாரத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் சவால் விடுத்துள்ளார்.

நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு கடிதம் அனுப்பியதாக மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு பதிலளித்து நிர்மலா சீதாராமன் வெளியிட்ட பதிவில், “முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. மேலும், அரசியல் உள்நோக்கம் கொண்ட, தமிழக விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு திரிபு என்பது தெளிவாகிறது” என்று பதிலளித்திருந்தார்.

இந்த நிலையில், நிர்மலா சீதாராமனுக்கு சவால் விடுத்து முதல்வர் ஸ்டாலின் திங்கள்கிழமை வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:




”நெல்லுக்குத்தமிழ்நாடுஅரசு வழங்கும் ஊக்கத்தொகையால் விளைச்சல் பெருகிக் கொண்டே போகிறது. எனவே, இந்த ஊக்கத்தொகையை நிறுத்த வேண்டும்" எனத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளருக்குத் தங்களின் அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில் மிகத் தெளிவாகவே உள்ளது.

கடிதத்தில் இல்லாத எதையும் நான் பேசவில்லை. அப்படி, பேசவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில், தற்போது மாநில அரசால் தரப்படும் ஊக்கத்தொகையை மறுபரிசீலனை செய்யுமாறும், நெல்லுக்கு இத்தகைய ஊக்கத்தொகை வழங்குவதை நிறுவத்துவது தொடர்பாகப் பரிசீலனை செய்யவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தங்களுடைய இந்தப் பதிவில், "குறைந்தபட்ச ஆதார விலையைத் தாண்டி ஊக்கத்தொகை வழங்குவது மாநில அரசின் முடிவு எனவும், அதனை யாரும் பறிக்கவில்லை" என்றும் கூறியிருக்கிறீர்கள்.

தங்களது கூற்று உண்மைதானென்றால், அந்தக் கடிதத்தைப் பொதுவில் வெளியிடத் தாங்கள் தயாரா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# தேவையில்லாத அழைப்புகளை கட்டுப்படுத்த வாட்ஸ் அப்பில் வசதி



**புதுடெல்லி, ஏப்.14:**

மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான வாட்ஸ் அப் உலகின் முன்னணி சமூக வலைத்தளங்களில் ஒன்றாக உள்ளது.

இந்தியாவில் மட்டும் 51 கோடிக்கும் மேற்பட்டவர்கள் இந்த வாட்ஸ் அப் செயலியை பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதும் பில்லியன் கணக்கானோர் பயன்படுத்தி வரும் இந்த வாட்ஸ் அப்பில், அவ்வப்போது புதிய அப்டேட்களையும் பாதுகாப்பு அம்சங்களையும் மெட்டா வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், வாட்ஸ் அப்பில் தேவையற்ற அழைப்புகளை கட்டுப்படுத்தவும் ஒரு ஆப்ஷன் உள்ளது. இது பலருக்கும் தெரிவது இல்லை.

அதாவது, வாட்ஸ்அப்பில் “அறியப்படாத அழைப்பாளர்களை நிறுத்து” என்ற சிறப்பம்சம் இருக்கிறது.

இதை ஆன் செய்தால், தேவையில்லாத அழைப்புகளிளின் தொந்தரவில் இருந்து உடனே விடுபடலாம். வாட்ஸ்அப், பயனாளர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு “Silence Unknown Callers” என்ற இந்த ஆப்ஷனை வைத்து இருப்பதாக வாட்ஸ் அப் கூறுகிறது.

இது எப்படி செயல்படும் என்றால், செட்டிங்ஸில் உள்ள இந்த ஆப்ஷனை ஆன் செய்தால், உங்கள் போனில் சேமித்து வைக்கப்பட்ட எண்கள் அல்லாமல் புதிய எண்களில் இருந்து அழைப்பு வந்தாலும் உங்கள் போன் ரிங்டோன் ஒலிக்காது. தெரியாத எண்களிலிருந்து வரும் அழைப்புகளை வாட்ஸ்அப் தானாகவே சத்தமில்லாமல் விடும். இதனால், நீங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் அல்லது ஓய்வெடுத்துகொண்டிருந்தாலும் தேவையில்லாத அழைப்புகள் உங்களை தொந்தரவு செய்யாது.

பிறகு உங்கள் வாட்ஸ் அப் கால் ஹிஸ்ட்ரியை பார்த்தால் யாராவது போன் செய்து இருந்தால் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அழைப்பு வரும் பொழுது எந்த சத்தமும் கேட்காது.

இது பயனர்களுக்கு தேவையற்ற தொந்தரவை தவிர்க்கும் என்று நெட்டிசன்கள் கூறியுள்ளனர்.

# ராமதாஸிடம் நலம் விசாரித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஏப்.14:**

சேலம் மேற்கு தொகுதியில் பாமக நிறுவனர் ராமதாஸ் அணியைச் சேர்ந்த மேற்கு தொகுதி எம்எல்ஏ இரா.அருளை ஆதரித்து பாமக நிறுவனர் ராமதாஸ் ஞாயிற்றுக்கிழமை இரவு சேலம் மேற்கு தொகுதிக்கு உட்பட்ட பள்ளப்பட்டியில் பிரசாரம் மேற்கொண்டார்.

பிரசார மேடையில் அமர்ந்த படி ராமதாஸ் பேசினார். பின்னர் மேடையில் இருந்து கீழே இறங்கும்போது ராமதாஸ் திடீரென மயக்கம் அடைந்தார். பின்னர் ஐந்து சாலை அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ராமதாஸுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில்தான் ராமதாஸிடம் முதல்வர் ஸ்டாலின் நலம் விசாரித்துள்ளார்.

# ‘ஜனநாயகன்’ லீக் விவகாரத்தில் 6 பேர் கைது: சைபர் க்ரைம் நடவடிக்கை

**சென்னை, ஏப்.14:**

நடிகர் விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ திரைப்படம் வெளியான அனைத்து இணையதளங்களையும் முடக்கி சைபர் க்ரைம் போலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுதொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் நடிப்பில், முன்னணி இயக்குநர் ஹெச். வினோத் இயக்கத்தில் உருவான திரைப்படம் ஜனநாயகன். விஜய்யின் திரைப் பயணத்தில் இது கடைசிப் படம் என்பதால், உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள் மத்தியில் இப்படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது. கடந்த ஜனவரி மாதம்



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியாக வேண்டிய இப்படம், தணிக்கை சிக்கல்களால் தள்ளிப்போனது.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, கடந்த மாதம் மறு தணிக்கைக் குழு படத்தை ஆய்வு செய்தது. விரைவில் தணிக்கைச் சான்றிதழ் பெற்று படம் திரையரங்குகளில் வெளியாகும் என ரசிகர்கள் ஆவலோடு காத்திருந்த வேளையில், ஜனநாயகன் திரைப்படத்தின் முழுப் பதிப்பும் இணையதளங்களில் சட்டவிரோதமாகக் கசிந்து, படக்குழுவினர் மட்டுமின்றி, தமிழ் சினிமா துறையையே அதிர்ச்சி அடையச் செய்தது. இந்த விவகாரம் தொடர்பாக டிஜிபி அலுவலகத்தில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில், சைபர் க்ரைம் போலீஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

முதல்கட்டமாக, படம் வெளியான அனைத்து இணையதள முகவரிகளையும் கண்டறிந்து, அவற்றை சைபர் க்ரைம் போலீஸார் தற்போது முடக்கியுள்ளனர். மேலும் இவ்வளவு பெரிய பட்ஜெட் படத்தை இணையத்தில் வெளியிட்ட நபர்கள் யார்?

இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக மாநில சைபர் கிரைம் போலீஸார் 6 பேரை கைது செய்துள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.




## இளையான்குடி வடக்கு ஒன்றிய கிராமங்களில் திமுக வேட்பாளர் தமிழரசி பிரச்சாரம்





**மானாமதுரை, ஏப். 14:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் தற்போதைய எம்எல்ஏ தமிழரசி இளையான்குடி வடக்கு ஒன்றிய பகுதியில் உள்ள தாயமங்கலம், பிராந்தமங்கலம், தடிய மங்கலம், சாத்தமங்கலம், கண்ணமங்கலம், நாமுகந்தன்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இப்பகுதியில் செய்த வளர்ச்சி திட்டங்களை கிராம மக்களிடம் கூறி பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரித்தார். கிராமங்களில் உள்ள வயதான முதியோர்களிடம் அவர்களின் உடல் நலம் பற்றி விசாரித்து சால்வை அணிவித்தார். இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன், கண்ணமங்கலம் கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சுப தமிழரசன் மற்றும் திமுக கூட்டணி கட்சியினர் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் பள்ளியில் வைத்து ஆசிரியர் வெட்டிக்கொலை... கணவர் வெறிச்செயல்

**சேலம், ஏப்.14:** ஓமலூர் அருகே அரசுப் பள்ளி வளாகத்தில் வைத்து பெண் ஆசிரியை ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஸ்ரீவித்யா என்பவரை அவரது கணவரே கொலைசெய்தது தெரியவந்துள்ளது.



குடும்பபிரச்னை காரணமாக அவரது கணவர் விஜயமுருகன் ஸ்ரீவித்யாவை வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமலூர் போலீசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைத் தொடங்கியுள்ளனர். தப்பியோடிய குற்றவாளியை தேடிவருகின்றனர்.

## மார்த்தாண்டம் அருகே சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உறுப்புகள் தானம்



**குமரி, ஏப்.14:** குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த பெண்ணின் இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகள் தானம் செய்துள்ளனர்.

பயணம் பகுதியைச் சேர்ந்த லதா, கடந்த 3ம் தேதி தனது மகனுடன் பைக்கில் செல்லும் போது மயங்கி கீழே விழ, தலையில் பலத்த காயம் அடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## விஜய்யை பார்க்க 3 கி.மீ தூரம் சாக்கடை கால்வாயில் நீந்தி வந்த த.வெ.க. தொண்டர்?



**கன்னியாகுமரி,ஏப்.14:** தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அந்தவகையில் நடிகரும், தவெக தலைவருமான விஜய்யும் மாவட்டவாரியாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒருபகுதியாக நேற்று கன்னியாகுமரியில் பரப்புரை மேற்கொண்டார். அப்போது விஜய் சைக்கிள் எல்லாம் ஓட்டி ரசிகர்களையும், தவெக தொண்டர்களையும் உற்சாகப்படுத்தினார். மேலும் இந்த பரப்புரையில் போது பல்வேறு வாக்குறுதிகளை அறிவித்தார்.

இந்நிலையில் தவெக தொண்டர் ஒருவர் நேற்று விஜய்யை பார்ப்பதற்காக 3 கிலோமீட்டர் தூரம் சாக்கடை கால்வாயில் நீந்தி வந்ததாக வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது. அதில் அவர் கால்வாயில் இருந்து மேலே ஏறும் காட்சிள் இடம்பெற்றுள்ளது.

விஜய்யின் பரப்புரை வாகனத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டு நின்றதால், கூட்ட நெரிசலில் சிக்காமல் விஜய்யை அருகில் இருந்து பார்ப்பதற்காக அவர் இவ்வாறு வந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் இந்த வீடியோ எந்த அளவு உண்மை என்பது தெரியவில்லை.

### சிவகங்கை தொகுதியில்

## அகில இந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வழக்கறிஞர் குரு முருகானந்தம் வாக்குகள் சேகரிப்பு



**சிவகங்கை, ஏப். 14:** சிவகங்கை தொகுதியில் அகில இந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் வேட்பாளர் வழக்கறிஞர் குரு முருகானந்தம் ஒரே நாளில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை சந்தித்து தென்னந்தோப்பு சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தேர்தலில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் பாமக, அகில இந்திய ஃபார்வர்டு பிளாக், டிஎம்டி மக்கள் இயக்கம், பசும்பொன் தேசிய கழகம், நாயுடு நாயக்கர் பேரவை, வெள்ளாளர் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளோடு சேர்ந்து தேர்தலை சந்திக்கிறார்.

விகே சசிகலா அகில இந்திய புரட்சி தலைவர் முன்னேற்றக் கழகம் கட்சியின் சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் சிவகங்கை மாவட்ட நீதிமன்றங்களில் 18 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கறிஞராக பணியாற்றும் வழக்கறிஞர் குரு முருகானந்தம் என்பவரை வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

கடந்த 25 ஆண்டுகளாக அண்ணா திமுகவில் ஜெயலலிதாவின் காலம் தொட்டு பணியாற்றி 2016 டிசம்பர் 5க்கு பிறகு சசிகலா தலைமையேற்று கட்சி பணியாற்றி வருகிறார்.





நேற்று ஒரே நாளில் சிவகங்கை வடக்கு ஒன்றியத்தில், காஞ்சிரங்கால், சோழபுரம், நாலுகோட்டை, ஒக்கூர், பிரவலூர், கீழப்பூங்குடி, மேலப்பூங்குடி, சிங்கினிபட்டி, அலவாக்கோட்டை, நாவலூர், அழகமாநகரி, சேதுநகர், பட்டாணிப்பட்டி, இடையமேலூர், சாலூர், மலம்பட்டி, சோனைப்பட்டி அழகிச்சிப்பட்டி, தமராக்கி வடக்கு, தமராக்கி தெற்கு, முடிகண்டம் உள்ளிட்ட ஊராட்சிகளில் 30 ஆயிரம் மேற்பட்ட மக்களை சந்தித்து தென்னந்தோப்பு சின்னத்திற்கு காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை வாக்குகள் சேகரித்தார்.

செல்லும் வழியில் வயல் வெளியில் விவாசய பணிகள் ஈடுபட்டு கொண்டிருந்த கிராம மக்களிடம் நாற்றுகள் நடவு செய்து வாக்குகள் சேகரித்தார் சிவகங்கை தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் குரு. முருகானந்தம்.

## பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழப்பு

**சாத்தூர் அருகே சோகம்:**



**சாத்தூர், ஏப்.14:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே, சத்திரப்பட்டி பகுதியில் தாயில்பட்டியைச் சேர்ந்த கண்ணன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை உள்ளது. இங்கு 30க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன.

தாயில்பட்டி, வெம்பக் கோட்டை, கலைஞர் காலனி, விஜயகரிசல்குளம், கோதைநாச்சியார்புரம் உள்ளிட்ட சுற்றுவட்டாரக் கிராமங்களை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மத்தாப்பு, தரைச்சக்கரம் உள்ளிட்ட பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன.

நேற்று காலை வழக்கம்போல பட்டாசு தயாரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒரு அறையில் 3 தொழிலாளர்கள் மணிமருந்தை கலக்கிக் கொண்டிருந்தனர். அப்போது உராய்வு காரணமாக பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இதில், 4 அறைகள் இடிந்து தரைமட்டமாகின. அறைகளில் இருந்து வெடிகள் விடாமல் வெடித்துச் சிதறின. இந்த வெடிச்சத்தம் சுமார் 10 கி.மீ தூரம் வரை கேட்டு அதிர்ந்தது.

தகவலறிந்து வந்த வெம்பக் கோட்டை போலீசார் மற்றும் சாத்தூர் தீயணைப்புத்துறையினர் வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இதில் கட்டிட இடிபாடுகளுக்குள் இருந்து தொழிலாளர்கள் ஒருவரது உடல் கருகிய நிலையில் மீட்கப்பட்டது. மேலும் 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

## அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறை சோதனை

**சென்னை, ஏப்.14:** அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறையினர் நேற்று (ஏப்.13) திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது. இதனிடையே, அமைச்சர் சேகர் பாபுவின் மகன்கள் ஜெயசிம்மன், விக்னேஷ் ஆகியோர் நடத்தி வரும் நிறுவனத்தில் திடீரென வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி



வருகிறார்கள்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள சாலை கட்டுமான டெண்டர் நிறுவனத்தில் அதிகாரிகள் இச்சோதனையை நடத்தி வருகிறார்கள். அதோடு, மத்திய பாதுகாப்பு படையினர் துணையுடன் தேர்தல் பறக்கும் படையினரும் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

பணப்பட்டுவாடா தொடர்பான புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் காலை முதலே மயிலாப்பூர், வடபழனி, கீழ்பாக்கம், அடையாறு உள்ளிட்ட 5 இடங்களில் வருமான வரித்துறையினர் திடீர் சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சோதனை முடிந்த பிறகுதான் கைப்பட்டப்பற்ற ஆவணங்கள் குறித்து தகவல் தெரியவரும் என கூறப்படுகிறது.

## "ஓரிரு நாளில் நேரில் வருகிறேன்..." – மருத்துவமனையில் இருந்தபடி வானதி வீடியோ பதிவு



**சென்னை, ஏப்.14:** "தமிழகத்தின் மீது அளப்பரிய அன்பும், தமிழகத்தின் ஆற்றல் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்துள்ள பிரதமர் மோடிக்கு, தமிழகத்தில் என்டிஏ கூட்டணியின் வெற்றி மூலம் அன்பை தெரிவிக்க வேண்டும்" என பாஜக எம்.எல்.ஏ வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவை வடக்கு தொகுதி பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அவர் தனது எக்ஸ் தளத்தில், "உங்கள் அன்பான வாழ்த்துகளுக்கும், எனக்காக இறைவனிடம் மனமுருக வேண்டிக் கொண்டதற்கும் மனமார்ந்த நன்றி. இந்த தருணத்தில் என்னுடன் நின்ற அனைத்து அண்ணன்களுக்கும், அக்காக்களுக்கும், தம்பி தங்கைகளுக்கும் உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் என் மனதில் பதிந்திருக்கிறது.

உங்கள் பிரார்த்தனையே என் வலிமை. உங்கள் நம்பிக்கையே என் மருந்து. விரைவில் குணமடைந்து உங்களிடையே வருவேன். மீண்டும் சந்திப்போம், வெற்றி கொண்டாடுவோம். இந்த தேர்தலில் நம் வெற்றி நிச்சயம் வெற்றி நமதே" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் தனது எக்ஸ் தள வீடியோ பதிவில், "அன்பு சகோதர, சகோதரிகளே உங்களின் அன்பினாலும், பிராத்தனையினாலும் உடல் நலம் தேறி கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரிரு நாட்களில் உங்களை நேரில் வந்து சந்திக்க இருக்கிறேன். நமது தேர்தல் பிரச்சாரம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். எனக்காக கோவை வடக்கு தொகுதியில் தீவிரமாக களப்பணியாற்றி வரும் அனைத்து நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் மனப்பூர்வமான நன்றி.

நேற்று மாலை 4 மணிக்கு பிரதமர் மோடி பாஜகவின் பூத் காரியகர்த்தகர்களுடன் உரையாட இருக்கிறார்.

எனது பூத் வலிமையான பூத் என்கிற கலந்துரையாடலில் நாம் அனைவரும் 'நமோ ஆஃப்' மூலம் இணைந்து இந்த நிகழ்வை வெற்றிகரமாக மாற்ற வேண்டும்.

தமிழகத்தின் மீது அளப்பரிய அன்பும், தமிழகத்தின் ஆற்றல் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்துள்ள பிரதமர் மோடிக்கு, தமிழகத்தில் என்டிஏ கூட்டணியின் வெற்றி மூலம் அன்பினை தெரிவிக்க வேண்டும். நாம் அனைவரும் பிரதமர் மோடி பேசுவதை கேட்க காத்திருப்போம்" என்று அவர் கூறினார்.

## தேவரை அவமதிக்கும் செல்லூர் ராஜூவின் வார்த்தைக்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள் – மாணிக்கர் தாகூர்



**மதுரை, ஏப்.14:** அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மதுரை மேற்கு தொகுதியில் 4-வது முறையாக போட்டியிடுகிறார். அவர் நேற்று சோலையழகுபுரம், எம்.கே.புரம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். அப்போது செல்லூர் ராஜூவை ஆதரித்து பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை பிரசாரம் செய்தார்.

தனக்காக பிரசாரம் மேற்கொள்ள வந்த அண்ணாமலை குறித்து செல்லூர் ராஜூ பேசுகையில், கர்நாடகாவில் ஐபிஎஸ் அதிகாரியாக இருந்தபோது சிங்கமாக, எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார். முத்துராமலிங்கத்தேவரின் மறு உருவமாக அண்ணாமலை இருக்கிறார் என்று கூறினார்.

இதுதொடர்பாக காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

செல்லூர் ராஜூவின் நகைச்சுவை உணர்வுக்கு அளவே இல்லாமல் போனது. தேவரை அவமதிக்கும் செல்லூர் ராஜூவின் வார்த்தைக்கு மதுரை மேற்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## மலரும் புத்தாண்டு மன நிறைவை வழங்கும் மங்கள ஆண்டாக அமையட்டும் – இபிஎஸ் வாழ்த்து

**சென்னை, ஏப்.14:** சித்திரை முதல் நாளாம் தமிழ்ப் புத்தாண்டு நாளை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

சித்திரை முதல் நாளாம் தமிழ்ப் புத்தாண்டு புலருகின்ற இந்த இனிய நன்னாளில், உலகெங்கும் வாழுகின்ற அன்புக்குரிய தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த 'தமிழ்ப் புத்தாண்டு' நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லாண்டு காலமாய் சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிய தமிழ் மக்கள், அந்த நாள் வேறு ஒரு நாளுக்கு மாற்றப்பட்டபோது மனமுடைந்தார்கள்.

சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாக மீண்டும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்ற பலகோடி தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில், இதய தெய்வம் அம்மா அவர்கள் சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக மீண்டும் அறிவித்து, மக்களின் மனங்களை குளிர்வித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

'புதிய சாதனைகள் பலவற்றைப் படைத்து; புதிய வெற்றிகளைப் பெற்று; வழி மறிக்கும் தடைகளை எல்லாம் தகர்த்து, அமைதியான வாழ்வைப் பெறுவோம்; வளமான தமிழ் நாட்டைப் படைத்திடுவோம்' என, இப்புத்தாண்டில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியேற்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஐயாவுக்கு ஏதாவது ஆச்சுன்னா இவர்களை சும்மா விட மாட்டேன் - அன்புமணி ராமதாஸ் ஆவேசம்!

**சேலம், ஏப்.14:** தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நேற்று சேலம் மாவட்டத்தின் பள்ளப்பட்டி பகுதியில், சேலம் மேற்கு தொகுதி வேட்பாளர் அருளை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்த பிரச்சாரத்தை முடித்துவிட்டு மேடையில் இருந்து இறங்கிய போது திடீர்



உடல்நலக்குறைவு ஏற்பட்டு ராமதாஸ் மயங்கினார். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனே அருகில் இருந்த தொண்டர்கள் அவரைத் தாங்கிப் பிடித்தனர். அவர் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.


அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சர்க்கரை அளவு குறைந்ததால் திடீர் மயக்கம் ஏற்பட்டதாகவும், தற்போது அவர் இயல்புநிலைக்கு திரும்பியதாகவும் தெரிவித்தனர். இந்த நிலையில், தந்தை ராமதாஸ் மயங்கியது பற்றி அன்புமணி ராமதாஸ் பா.ம.க. நிர்வாகியிடம் மேடையிலேயே பேசிய வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

வீடியோவின் படி, விருத்தாசலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தின் போது, "ஐயாவுக்கு ஏதாவது ஆச்சுனா, இவர்களை நான் சும்மா விட மாட்டேன்," என்று கூறுகிறார்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல்
வேலை செய்யலாம்
தொடர்புக்கு
8148215778
8248610592
A trustworthy help service for Chennai families


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106


குன்னத்தேழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
டர்னர் (TURNER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிழக்கு வருவன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
தீபாவளி
RAVIKUMAR AND COMPANY



just499
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.



THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit / No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!





காயங்கள் இல்லாத
இதயம் இல்லை,
ஆனால் உன் அன்பு
எல்லா காயங்களையும்
குணமாக்கும்.

தூரம் என்பது ஒரு எண்
தான், நம் இதயத் துடிப்பு
ஒன்றாக இருக்கும் வரை.

நீ அழும்போது சிந்தும்
கண்ணீர்த்துளி, என்
இதயத்தில் ஒரு தழும்பை
ஏற்படுத்துகிறது.

கடவுளிடம் கேட்ட
வரங்களில், மிகச்சிறந்தது
உன் அன்பு தான்.

நேற்று இருந்ததை விட
இன்று உன்னை இன்னும்
அதிகமாக நேசிக்கிறேன்.

## வாழ்க்கை தத்துவம்...




யாருக்காகவும் கண்ணிர்
விடு யாரும் துடைக்க
வருவார்கள் என்றெண்ணி
கண்ணிர் விடாதே

என்ன செய்ய வேண்டும்
என்று முடிவெடுப்பது போன்றே
என்ன செய்ய கூடாது என
முடிவெடுப்பதும் முக்கியம்

சிக்கலிலும் சிக்னலிலும்
பொறுமையாக காத்திருந்தால்
போதும் வழி தானாக
கிடைத்து விடும்

# பரிட்சைக்கு நேரமாச்சு....



"வேலா இவ்வளவு நேரம் எங்கே போயிட்டு வர்றே" என அம்மா கேட்க "தோட்டத்துப் பக்கம் மா... "அங்கே எதுக்குடா போனே..." "பரிட்சைக்கு படிக்கத்தாம்மா போனே.." "மொட்ட மாடியில் படிக்க முடியாதா?" பதிலேதும் பேசாம வீட்டுக்குள் சென்றவன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே வேகமாக உடைகளை மாற்றியவன் அம்மா தயாராய் வைத்திருந்த காலை உணவை வேகமாக சாப்பிட்டவனுக்கு தொண்டையில் அடைப்பு ஏற்பட்டு கண்ணில் கண்ணீர் வரும் வரை இருமிக் கொண்டிருக்க, வேலன் இருமல் சத்தம் கேட்டு "ஏன்டா பக்கத்தில் இருக்கிற தண்ணீரை எடுத்துக்குடிக்க வேண்டியது தானே" என சத்தம் போட்டபடி அருகில் வந்தாள் அம்மா "பரிட்சைக்கு நேரமாயிருச்சும்மா.." "அவசர படாம மெதுவா சாப்பிட்ட தாண்டா நல்லது அவசர அவசரமா சாப்பிடுறதாலே உணவு பாதையில் போகாமா மூச்சுக் குழாய் வழியா போறதாலே உனக்குத் தாண்டா கெடுதல்" "எனக்கு என்னம்மா.. கெடுதல் புதுசா சொல்றே! "என்றான் "வேலா புதுசு ஒண்ணும் இல்லே எல்லோருக்கும் சொன்னது தான்டா சாப்பிடும் போது வேறு எந்த சிந்தனையும் இருக்கக் கூடாது, யாருடையும் பேசக்கூடாது, அப்படி அவசியம் என்றால் வாயில் உள்ள உணவை நன்றாக மென்று விழுங்கிய பின் தான் பேசனும் , உணவுகள் அதிகமாகவும் சாப்பிடக்கூடாது வயிற்றில் கொஞ்சம் காலி இடம் இருக்கனும் உணவுகள் செரிக்க சூழ்ச்சி செய்யும் போது தொண்டை வரை உணவுகள் வெளியே அமிலம் கலந்து வருவதால் நாம் எதாவது வேலையிலே, எங்கோ சென்று கொண்டிருந்தாலும் உடல் தொந்தரவு ஏற்படும்,அதோடு உணவு சாப்பிட்ட பின் தான் சிறிது நேரங்களித்து தேவையான அளவு தண்ணீர் குடிக்கனும், நீ, படிக்கிறவன் இப்போ ஏற்பட்ட இருமல் தொல்லையில உணவின் காரத்தன்மையால் எரிச்சல் ஏற்பட்டு தொந்தரவு கொடுக்கும் சில சமயத்தில தலைவலி ஏற்படக்கூடும் அதனால் நீ! படிச்ச பாடங்கள் தேர்வு எழுதும் போது உனக்கு சரியான பதில் தோன்றாமல் சிரமப்பட வைக்கும் அதோடு படிப்பைத் தவிர தேர்வு சமயத்தில் வேறு எதையும் மனதில் ஈடுபடுத்திடக் கூடாது சிந்தனை மாற்றம் ஏற்படுத்தியும்,அதனால் கவனம் தேவைடா வேலா" "அம்மா வாத்தியார் பாடம் நடத்துற மாதிரி நீயும், கிளம்பிட்டியா.... போதும்மா பரிட்சைக்கு நேரமாச்சு வர்றேம்மா "என வேகமா சென்றான் வேலன் "படிக்கிறேன்னு கண்ட கண்ட இடத்துலே சுத்திட்டு வந்து சரியாக் கூட சாப்பிடாமல் ஓடுறாபாரு " என்று வேலன் செல்வதையே பார்த்துக் கொண்டு இருந்தாள்



நல.ஞானபண்டிதன்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கேள்வி: கொசு ஏன் கறுப்பா இருக்கு?*

*பதில்: ஏன்னா அது ஒரு 'கொசு' (Ghost) கிடையாது!*

*கேள்வி: யானை ஏன் ஒயிட்டா (White) இல்ல?*

*பதில்: ஏன்னா அதுகிட்ட 'யானை-ஒயிட்' (Anywhite/Anywhere) இல்ல!*



# தினம் ஒரு சமையல்



## பஜ்ஜி மிளகாய் சட்னி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 4 | -பஜ்ஜி மிளகாய் |
| 5 | -தக்காளி |
| 10 பல் | -பூண்டு |
| 1/4 கப் | -நல்லெண்ணெய் |
| 1/4 கப் | -கொத்தமல்லி இலை |
| 2 | -காய்ந்த மிளகாய் |
| 2 | -பெரிய வெங்காயம் |
| தேவையான அளவு | -உப்பு |

செய்முறை:


தக்காளி, வெங்காயம், மிளகாயை துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். கடாயில் நல்லெண்ணெய் சேர்த்து சூடானதும் நறுக்கிய வெங்காயம் பூண்டு சேர்த்து வதக்கவும். கண்ணாடி பதத்தில் வதங்கிய பின் நறுக்கி வைத்துள்ள தக்காளி கொத்தமல்லி இலைகள் உடைத்த காய்ந்த மிளகாய் சேர்த்து தக்காளி மசியும் வரை வதக்கவும். கடைசியில் கொஞ்சமாக மஞ்சள் தூள் உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.



இந்தக் கலவையை நன்றாக பரப்பி ஆற வைக்கவும்.

ஆரியபின் மிக்ஸியில் அரைக்கலாம். விருப்பப்பட்டால் கடுகு உளுத்தம் பருப்பு கருவேப்பிலை சேர்த்து தாளித்து சேர்க்கலாம். இட்லி தோசை சப்பாத்தி மற்றும் டிபன் வகைகளுடன் பொருத்தமாக இருக்கும்.

## அரளி பயன்கள்



அரளி (NERIUM OLEANDER) ஒரு விஷத்தன்மை வாய்ந்த மருத்துவத் தாவரம், இது முக்கியமாக தோல் நோய்கள், வீக்கம் மற்றும் தீராத புண்களை ஆற்றும் வெளிப்புறப் பயன்பாட்டிற்கு (பூச்சு) சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதன் வேர் மற்றும் பூக்கள் தலைவலி, மூட்டு வலி மற்றும் தொற்றுநோய்களை நீக்க உதவும். குறிப்பு: இது அதிக நச்சுத்தன்மை உடையது, எனவே மருத்துவர் ஆலோசனையின்றி உட்கொள்ளக்கூடாது.

அரளியின் முக்கிய பயன்கள்:

மருத்துவப் பயன்கள் (வெளிப்புறப் பயன்பாடு):

தோல் நோய்கள்: அரளி இலை மற்றும் வேர்பட்டை பொடி, படை, சொறி, குஷ்டம் மற்றும் தீராத அழுகிய புண்களை ஆற்றும் களிம்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

வீக்கம் மற்றும் வலி: அரளி இலை சாற்றை வெதுவெதுப்பாக்கி வீக்கம் உள்ள இடங்களில் தடவினால் வீக்கம் குறையும்.

தலைவலி: செவ்வரளி பூக்களை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் கடுமையான தலைவலி குணமாகும்.

மூல நோய்: வேரை அரைத்து மூல நோய் கட்டி உள்ள இடங்களில் தடவினால் குணம் கிடைக்கும்.

அலங்காரம் மற்றும் பாதுகாப்பு:

வேலி பயிர்: சாலை ஓரம் மற்றும் தோட்டங்களில் வேலையாக வளர்க்கப்படுகிறது.

சூழல் பாதுகாப்பு: மண்ணரிப்பைத் தடுக்கவும், தூசி மற்றும் இரைச்சலைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது.

வழிபாடு: சிவப்பு மற்றும் வெள்ளை அரளிப் பூக்கள் சிவன் கோவில்களில் பூஜைக்கு பயன்படுத்தப்படுகின்றன.

மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்

இன்றைய காலகட்டத்தில் மலச்சிக்கல் பிரச்சனையால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மஞ்சள் அரளி இலை இந்தப் பிரச்சனையைப் போக்க உதவியாக இருக்கும். அத்தகைய சூழ்நிலையில், மஞ்சள் அரளி இலைகள் மற்றும் பட்டைகளைக் கஷாயம் செய்து அதை உட்கொள்ளுங்கள். அவ்வாறு செய்வதன் மூலம் மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

தோல் பிரச்சனைகள் நீங்கும்

மஞ்சள் அரளி பல தோல் தொடர்பான பிரச்சனைகளை நீக்குவதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மருக்கள் அல்லது புள்ளிகளால் பாதிக்கப்பட்டவர்கள் மஞ்சள் அரளி பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட பேஸ்ட்டை தங்கள் தோலில் தடவலாம் என்று நாங்கள் உங்களுக்குச் சொல்கிறோம்.




# காவல் அதிகாரியாக களம் இறங்கும் சிவாஜி கணேசனின் பேரன்.. 'லெனின் பாண்டியன்' பட அப்டேட்!




தமிழ் சினிமாவில் புதிய முகங்களை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், சத்யா ஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில், செந்தில் தியாகராஜன் மற்றும் அர்ஜுன் தியாகராஜன் இணைந்து தயாரிக்கும் 'லெனின் பாண்டியன்' திரைப்படம் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த படத்தை T. D. பாலச்சந்திரன் இயக்குகிறார்.

இந்த படத்தின் மூலம், மறைந்த நடிகர் சிவாஜி கணேசன் அவர்களின் பேரன் தர்ஷன் கணேசன் ஹீரோவாக அறிமுகமாகிறார். இப்படத்தில் அவர் காவல் அதிகாரி வேடத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், முக்கிய கதாபாத்திரத்தில் கங்கை அமரன் நடித்துள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகை ரோஜா இந்த படத்தின் மூலம் தமிழில் மீண்டும் நடிக்க வருகிறார். இதனால் ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. இப்படத்தில் கதாநாயகியாக ஸ்ரிதா ராவ் நடித்துள்ளார். அவரது கதாபாத்திரம் "பிரியா" என படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில், 'லெனின் பாண்டியன்' திரைப்படத்தின் டிரெய்லர் விரைவில் வெளியாக உள்ளது என தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளதால், ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.



ஹாங் காங் சென்று இருக்கும் பிரியா வாரியர் அங்கு ஹாட் உடையில் வலம் வந்த ஸ்டில்களை பாருங்க. ரசிகர்களை கவரும் புகைப்படங்கள்.

# சிக்கன் குழம்பு சாப்பிட வந்திருக்கேன்!- மதுரையில் பிரதீப் ரங்கநாதன் அடித்த லூட்டி..



இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில், நடிகர் பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் சமீபத்தில் வெளியான LIK திரைப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. இப்படத்தின் புரமோஷன் பணிகளுக்காக பிரதீப் ரங்கநாதன் மதுரைக்கு வருகை தந்தார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர், "நான் மதுரைக்கு சிக்கன் குழம்பு சாப்பிடத் தான் வந்திருக்கிறேன். இங்குள்ள அனைத்து விதமான உணவுகளும் எனக்கு மிகவும் பிடிக்கும். மதுரை சாப்பாட்டுக்கு நான் பெரிய ரசிகன்," என்று சிரிப்புடன் தெரிவித்தார்.

தொடர்ந்து படம் குறித்து பேசிய அவர், "நாம் எதிர்பார்த்ததை விட படம் மிகவும் நன்றாக வந்துள்ளது. இன்று மதுரையில் படம் வெளியாகியுள்ள திரையரங்குகளுக்கு சென்று ரசிகர்களின் வரவேற்பைப் பார்க்க உள்ளேன்." என்றார். மேலும், படத்தில் சீமான் வரும் காட்சிகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளதாகவும் கூறினார்.

இதற்கிடையில், ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் லீக் ஆனது குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார். "இது மிகவும் தவறான செயல். தயவுசெய்து லீக் ஆன படங்களை பார்க்காமல், மக்கள் திரையரங்குகளில் சென்று ஆதரவு அளிக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார். அவரது இந்த கருத்துக்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

# பசுவிற்கு அகத்திக்கீரை கொடுத்து வழிபடுவது ஏன்?

பசு ஏதாவது விஷத்தன்மை உடைய தாவரத்தை அல்லது உணவை அருந்தி அதிலிருந்து கிடைக்கும் பாலை அருந்தினால் நமக்கும் அந்த விஷத்தன்மை வருமா?என்று சோதித்து பார்த்ததில் விஞ்ஞானிகள் அதிர்ந்து போனார்கள்.*

90 நாட்கள் பசுவுக்கு தினமும் விஷம் கலந்த தாவரத்தை கொடுத்து விட்டு அதன் பாலை ஆராய்ந்து பார்த்தார்கள்.

விஷத்திற்கான எந்த தடயமும் அந்த பாலில் இல்லை..

சரி அந்த விஷம் எங்கு தான் போனது என்று ஆராய்ந்து போது ஆச்சர்யம் அடைந்தார்கள்.

ஆல கால விஷத்தை உண்ட பரமசிவன் உலகை காக்க அந்த விஷத்தை தன் கழுத்திலேயே தங்க வைத்தான் என்பதுதான் வரலாறு.

அதே போல் பசுவும் விஷத்தை தன் கழுத்திலேயே தங்க வைத்திருக்கிறதாம். அதனால் தான் பழங்காலம் தொட்டு பசுவுக்கு அகத்திக் கீரை கொடுக்கிறோம். அகத்திக்கீரை விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டது. பசுவிற்கு அகத்திக்கீரை தருவதால் ஏற்படும் பலன்கள்



பசுவுக்கு நாம அகத்திக்கீரைதருவதால்.,

முதலில் நாம் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

கொலை களவு செய்வதால் உண்டாகும் பிரம்ம ஹத்தி முதலிய தோஷங்கள் விலகி விடும்.

நீண்ட நாட்களாக திதி, கர்மா செய்யாமல் விட்டிருந்தால் அந்த பாவம் பதினாறு அகத்தி கீரை கட்டை பசுவுக்குத் தருவதால் நீங்கும்.

பித்ரு தோஷங்கள் இருந்தால் நீங்கும் சுப வாழ்வு ஏற்படும். கோமாதா என்று போற்றப்படும் பசுவிற்கு அகத்திக் கீரை தருவதால், முதலில் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் . பெரும் தவறுகளால் உண்டாகும் பிரம்மஹத்தி தோஷங்கள் விலகிவிடும். முன்னோருக்கு செய்ய வேண்டிய நீத்தார் கடன்களான திதி, கர்மா செய்யாமல் இருந்தால் ஏற்படும் பாவம் பதினாறு அகத்தி கீரை கட்டை பசுவுக்கு தருவதால் நீங்கும். மேலும் பித்ரு தோஷங்களும் நீங்கும். பசுவை ஒரு முறை பிரதட்சணம் செய்வதால் பூலோகம் முழுவதும் பிரதட்சணம் செய்த புண்ணியம் கிடைக்கும். கோமாதாவை சிரத்தையுடன் வணங்கிட பிரம்மா, விஷ்ணு, முதலான அனைத்து தெய்வங்களையும் பூஜித்த புண்ணியம் நமக்கு கிடைக்கும். உண்பதற்கு பசுவிற்கு புல் கொடுத்தாலும் (கோக்ராஸம்), பசுவின் கழுத்து பகுதியில் சொரிந்து கொடுத்தாலும் (கோகண்டுயனம்) நம்மை பிடித்த தீராத பாவங்கள் விலகும்.

பசுக்கள் மேய்ந்து விட்டு வீடு திரும்பும் சந்தியா காலம் கோதூளி காலம் (லக்னம்) என்று அழைக்கப்படுகிறது. இது மிக புண்ணியமான காலமாகும்.பசு நடக்கும் போது எழும் புழுதியானது நம் உடலில் படுவது 8 வகை புண்ணிய ஸ்நானங்களில் ஒன்றாகும். பசுவின் கால் பட்ட தூசியைதான் மாமன்னர்கள் பூசிக்கொண்டார்கள். "மா" என்று பசு கத்தும் ஓசை அப்பகுதிக்கு மங்கலத்தை தருகிறது. பசு வசிக்கும் இடத்தில், அதன் அருகில் அமர்ந்து சொல்லும் மந்திர ஜபமோ, தர்ம காரியங்களோ நூறு மடங்கு பலன்களை அள்ளித் தரும்.

எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி 620 015

## தினம் ஒரு தலைவர்கள்

# ஷஹீத் சிவராம் ராஜகுரு வரலாறு

ராஜ்குரு 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள கேத் என்ற இடத்தில், பூனாவிற்கு அருகிலுள்ள பீமா நதிக்கரையில் பிறந்தார். அவர் தேசஸ்தா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் பெயர் ஸ்ரீமதி பார்வதி தேவி மற்றும் அவரது தந்தையின் பெயர் ஸ்ரீ. ஹரிநாரைன் ராஜ்குரு. அவரது முழுப் பெயர் 'ஹரி சிவராம் ராஜ்குரு' அல்லது 'சிவ்ராம் ஹரி ராஜ்குரு'. ஒவ்வொரு ஆகஸ்ட் 24 ஆம் தேதியும், ராஜ்குரு பிறந்தநாளில், சஹீத் ராஜ்குருவின் துணிச்சலான செயல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ராஜ்குருவின் பிறந்த நாள் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.

சஹீத் சிவராம் ராஜகுரு மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய உண்மைகள் 1914 ஆம் ஆண்டு, அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்தார். அவரது குடும்பப் பொறுப்பு அவரது சகோதரரின் தோள்களில் விழுந்தது. அவரது சகோதரர் தின்கர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனது தாய்க்கும் சகோதரருக்கும் உணவளித்தார். அவர் உள்ளூரில் கெட் நகரில் தொடக்கக் கல்வியைப் பெற்றார், பின்னர் புனேவில் (பூனா) உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அவரது தந்தை இறந்தபோது அவரது சகோதரர் அவரைக் கவனித்துக் கொண்டார், மேலும் அவரது குடும்பத்தினர் சிவராம் ராஜ்குருவைப் பற்றி சில கனவுகளைக் கொண்டிருந்தனர், ஆனால் விதி பின்னர் மாறியது. அவர் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார், மேலும் இளம் வயதிலேயே சேவா தளத்திலும் சேர்ந்தார். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் சிவராம் ராஜ்குருவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், ஏனெனில் அவர்தான் ராஜ்குரு அணுகிய முதல் மனிதர். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் நடத்திய பல பயிற்சி முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது வழக்கம், மேலும் லோக்மான்ய திலகரின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

15 வயதில், அவர் வாரணாசிக்கு நடந்து சென்று ஒரு சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வாரணாசியை அடைய ஆறு நாட்கள் ஆனது என்று கூறப்படுகிறது. அந்தப் பள்ளியில், அவரைப் போன்ற புரட்சியாளர்களான சில புதிய நண்பர்களை அவர் உருவாக்கினார். படிப்படியாக அவரது நோக்கம் தெளிவாகியது. பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளை வீழ்த்துவதே அவரது ஒரே குறிக்கோள். அவர் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவுக்கு எந்த வகையிலும் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது கனவை நனவாக்க, அவர் இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவத்தில் சேர்ந்தார். பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சுதந்திரம் பற்றிய ஒரே கருத்தை அவர்கள் தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் பகிர்ந்து கொண்டதால் அவர்களின் நட்பு மிகவும் வலுவாக வளர்ந்தது.

சைமன் கமிஷனும் அதன் பின்விளைவுகளும் ஆங்கிலேயர்களால் ஒரு புதிய காப்பக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் இந்த புதிய சீர்திருத்தத்தை திருத்துமாறு கோரினர். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, நாட்டின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், அரசாங்கத் திட்டங்கள் பொதுமக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதை ஆராய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும் அறிக்கைகளின் அடிப்படையில், புதிய திட்டங்கள் உருவாக்கப்படும், மேலும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதற்காக, பிரிட்டிஷ்காரர் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஒரு குழுவை அமைத்தார். இந்தக் குழுவிற்கு சர் ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ்காரர் தலைமை தாங்கினார்.

ஏழு எம்.பி.க்கள் கொண்ட ஒருவர் இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறார் என்பதால் இந்திய மக்கள் கோபமடைந்தனர், ஆனால் அந்த ஏழு பேர் கொண்ட குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை. 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை நடத்தி, சைமன் கமிஷனைப் புறக்கணிக்குமாறு இந்தியர்களிடம் முறையிட்டது, மேலும் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த லார்ட் பிர்கன்ஹெட்டை சவால் செய்தது. அனைத்து இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குமாறு அவர்கள் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர். முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக்கும் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க முடிவு செய்தது.



சைமன் கமிஷன் ஜனவரி 1928 இல் இங்கிலாந்தை விட்டு வெளியேறியது, அவர்கள் வந்தவுடன், வழியில் பெரும் போராட்டங்கள் நடந்தன. மக்கள் கமிஷனை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றனர். இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன. அவற்றில் 'சைமன் கமிஷனுக்கு' எதிரான ஒரு போராட்டம் பிரபலமானது அல்லது மிகவும் பிரபலமற்றது. அக்டோபர் 30, 1928 அன்று, கமிஷன் லாகூருக்கு வந்தபோது, அவர்களை கருப்புக் கொடிகளுடன் வரவேற்கத் தயாராக இருந்த போராட்டக்காரர்களை அவர்கள் எதிர்கொண்டனர். அந்த குறிப்பிட்ட போராட்டத்திற்கு இந்திய தேசியவாதியான லாலா லஜ்பத் ராய் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு பிப்ரவரியில் பஞ்சாப் சட்டமன்றத்தில் இந்த கமிஷனுக்கு எதிராக அவர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் உள்ளூர் போலீசார் போராட்டக்காரர்களை அடிக்கத் தொடங்கினர். அந்த போராட்டத்தில், மற்றவற்றுடன், தலைவராக இருந்த லாலா லஜ்பத் ராய் படுகாயமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.

இந்தச் செய்தி இந்தியாவில் காட்டுத்தீ போல பரவியது. மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928 ஆம் ஆண்டு லாகூரில் பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஜே.பி. சாண்டர்ஸைக் கொல்ல பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குரு ஒரு திட்டத்தை வகுத்தார். லாலா லஜ்பத் ராயின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்காக. பல இந்தியர்கள் இந்த செயலைப் பாராட்டினர். பல இந்திய குடிமக்கள் இதைக் கண்டித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் இந்தச் செயலைக் கண்டித்தது. ஆனால் இறுதியில், இது இந்திய மனங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியைத் தூண்டியது - அவர்களால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறை சுதந்திரப் போராளிகள் புரட்சியை விரைவுபடுத்தினர்.

சிவராம் ராஜகுரு படுகொலைக்குப் பிறகு என்ன நடந்தது? படுகொலைக்குப் பிறகு, ராஜகுரு ஒரு தப்பியோடிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் நாக்பூருக்கு ஒளிந்து கொள்ளச் சென்றார். நாக்பூரில் உள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கே.பி. ஹெட்கேவரைச் சந்தித்தார். புனேவுக்குத் திரும்பும் வழியில், அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று பேரும், மேலும் 21 சக சதிகாரர்களும் கைது செய்யப்பட்டு வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு விதிமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்தனர். அவர்களின் கதை இந்திய மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்தது. ராஜகுரு, இரண்டு துணிச்சலான மனிதர்களுடன் சேர்ந்து, 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். பின்னர், அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டன. சிவராம் ராஜகுரு தியாகியானபோது அவருக்கு வயது வெறும் 23. அவருக்கு இரும்பு இதயம், அச்சமற்ற மனப்பான்மை மற்றும் தைரியம் இருந்ததாக அவரது நெருங்கிய கூட்டாளிகள் கூறுகிறார்கள். பகத் சிங்கின் கட்சியின் 'துப்பாக்கி ஏந்தியவர்' அவர். இந்த துணிச்சலான செயல்களைக் கேட்டு, நாம் நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும், நாம் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களா? சிவராம் ராஜகுரு போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அதே மக்களால் இந்த சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்முறை, கலவரங்கள், திருட்டுகள் மற்றும் ஊழல்கள் நம் தேசத்தை முடக்கியுள்ளன. அரசியல்வாதிகள், தங்கள் லாபத்திற்காக, நம் மக்களைப் பிரிக்கிறார்கள், மேலும் வாக்களிப்பின் சக்தி என்ன, நமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு எவ்வளவு வன்முறை மற்றும் மனித உயிர் செலவாகும் என்பது மக்களுக்கு இன்னும் தெரியாது. ஜனநாயகத்திற்கும் ஒரு விலை உண்டு. மக்களுக்குத் தேவையானது செயல்பாட்டில் பங்கேற்பதுதான். ஜனநாயகம் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு போன்றது. நாம் வாக்களிக்கும்போது நமது வேலை முடிவடைவதில்லை; மாறாக, அது நாம் வாக்களிக்கும்போது தொடங்குகிறது. நாம் அற்பமான தனிப்பட்ட மற்றும் குறுகிய கால ஆதாயங்களுக்காக விழுகிறோம், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூட மாட்டோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஒரு விலையில் வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீண்ட காலத்திற்கு முன்பு நடப்பட்ட மரங்களின் பழங்களை நாம் அனுபவித்து வருகிறோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை பயனுள்ளதாக மாற்ற தேசத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

# மேற்கு வங்காளத்தில் மேலும் 12 போலீஸ் உயர் அதிகாரிகள் இடமாற்றம்

**கொல்கத்தா, ஏப்.14:**

மேற்கு வங்காள சட்டசபைக்கு வருகிற 23 மற்றும் 29-ந்தேதிகளில் 2 கட்டமாக வாக்குப்பதிவு நடக்க உள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இங்கு சுமார் 500 அரசு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதாக ஆளும்கட்சியாக இருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவரான மம்தா பானர்ஜி குற்றம் சாட்டினார்.

பா.ஜனதாவினருக்கு ஆதரவாக செயல்படும் பலர் தேர்தல் அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் அங்கு மேலும் 12 போலீஸ் அதிகாரிகள் தேர்தல் கமிஷனால் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ள தகவல் வெளியாகி இருக்கிறது.

சி.ஐ.டி. பிரிவு போலீஸ் டி.ஐ.ஜி.யாக இருந்த சோமாதாஸ் மித்ரா, குற்றப்பிரிவு இணை கமிஷனராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

இதேபோல சிறப்பு அதிரடிப்படை டி.ஐ.ஜி. தேபஸ்மிதாதாஸ், கொல்கத்தா உளவுப்பிரிவு இணை கமிஷனராக மாற்றப்பட்டார். இதேபோல 12 அதிகாரிகளை இடமாற்றம் செய்து தேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பித்து உள்ளது.

# தேர்தல் பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களிடம் ரூ.1,000 பிடித்தம்; வெளியே சொல்லமுடியாமல் குமுறல்




**புதுச்சேரி, ஏப்.14:**

புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலுக்காக மொத்தம் 1,099 ஓட்டுச் சாவடிகள் அலுவலர்கள், அமைக்கப்பட்டிருந்தது. ஓட்டுச் சாவடிகளில் தலா ஒரு தலைமைதேர்தல் அலுவலர், 3 ஓட்டுப் பதிவு பல்நோக்கு ஊழியர் மற்றும் ஒரு ஓட்டுச்சாவடி அலுவலர் வாக்கு பதிவு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு ஓட்டுப் பதிவு முடிந்து, மின்னணு ஓட்டுப்பதிவுஇயந்திரங்களை வேனில் ஏற்றும் போதே தேர்தல்ஆணையம்வழங்கும் மதிப்பூதியம்வழங்கப்பட்டது. அதில் தலைமை தேர்தல் அலுவலருக்கு ரூ.3,500, ஓட்டுப்பதிவு அலுவலர் நிலை 1 -க்கு ரூ.3,000, ஒரு ஓட்டுப்பதிவு அலுவலர்கள் நிலை 2 மற்றும் நிலை 3-க்கு தலா ரூ.2,700-ம், பல்நோக்கு ஊழியருக்கு ரூ.1,200 மற்றும் ஓட்டுச்சாவடி அலுவலருக்கு ரூ.1500 வழங்கப்பட்டது. இந்த பணத்தில் காலை சிற்றுண்டி மதிய உணவு வழங்கியதற்காக ரூ.300 முதல் ரூ.400 வரை பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால், 2 தொகுதிகளில்மட்டும், வாக்கு பதிவுபணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பூதியத்தில் சாப்பாட்டிற்காக தலைமை அலுவலர் மற்றும் ஓட்டுப் பதிவு அலுவலர்களிடம் ஆயிரம் ரூ.1,000 பல்நோக்கு ஊழியரிடம் ரூ.500 பிடித்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால் பிற தொகுதிகளில் ரூ. 300 முதல் 400 சாப்பாட்டிற்கு பிடித்தம் செய்துள்ள நிலையில், 3 தொகுதிகளில்மட்டும்ரூ.1,000 பிடித்தம் செய்திருப்பது ஊழியர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனை வெளியே சொல்ல முடியாமல் ஊழியர்கள் வேதனையடைந்துள்ளனர்.

# திருமணத்திற்கு சென்று திரும்பிய போது விபத்தில் சிக்கி 6 பேர் பலி – உத்தர பிரதேசத்தில் சோகம்

**லக்னோ, ஏப்.14:**



உத்தர பிரதேசத்தின் ஹாப்பூர் மாவட்டத்தில் பஸ் ஒன்று திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பின்னர் சொந்த ஊருக்கு இன்று காலை சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் மணமகனின் தந்தையும் பயணம் செய்திருந்தார். அப்போது தௌலானா-குலாவதி சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, எதிரே வந்த லாரி ஒன்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில், பஸ்சின் முன்பகுதி முற்றிலும் சேதமடைந்து, வாகனம் தலைகீழாக கவிழ்ந்தது. இந்த நிலையில், சம்பவ இடத்திலேயே மாப்பிள்ளையின் தந்தை மற்றும் பஸ் டிரைவர் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் கடுமையாக காயமடைந்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மீட்பு பணியில் ஈடுபட்டு, காயமடைந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர். திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வீடு திரும்பும் போது ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மேற்கு வங்கத்தில் மோடி அதிரடி: தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு புதிய வாக்குறுதிகள்

**கொல்கத்தா, ஏப்.14:**



294 தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடைபெறும் என கடந்த 15-ந்தேதி பிற்பகலில் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. இதன்படி 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

நேற்று மாலை சிலிகுரியில் நடைபெற்ற 15 கிலோமீட்டர் நீள பிரம்மாண்ட வாகன பேரணி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து இன்று கவகாளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், வட வங்காளத்தின் வளர்ச்சி மற்றும் தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் நலன் குறித்து பிரதமர் கூறியதாவது:-

டார்ஜிலிங் உட்பட வட வங்காளத்தின் பெரும்பகுதி, அதாவது இப்பிராந்தியம் முழுவதுமே தேயிலை உற்பத்திக்கு உகந்த ஒரு பகுதியாகும். ஆனால், இரக்கமற்ற திரிணாமுல் காங்கிரஸ் அரசாங்கம் இந்த தேயிலை தோட்டங்களையும் அழித்து வருவதை நீங்கள் காண்கிறீர்கள்.

உங்கள் அண்டை மாநிலமான அசாமில், பாஜக அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களில் பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தியுள்ளது. தேயிலை தோட்ட தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் அசாமில் பெருமளவிலான பணிகள் செய்துள்ளது. மேலும், அங்குள்ள தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு நில பட்டாக்களும் வழங்கப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

இங்குள்ள தேயிலை தோட்ட குடும்பங்களின் நலனுக்காக, மேற்கு வங்க பாஜகவும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

தொழிலாளர் குடும்பங்களுக்கு நில பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும், நிரந்தர வீடுகள், குழாய்வழி குடிநீர், மின்சாரம் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியவை ஏற்படுத்தி தரப்பட வேண்டும். சுருக்கமாக சொன்னால், இங்கு அமையவிருக்கும் பாஜக அரசாங்கம், தொழிலாளர்களின் வருமானம், கல்வி, மருத்துவம் என அனைத்து துறைகளிலும் முழுவீச்சில் பணியாற்றும் என்று பிரதமர் மோடி கூறினார்.

# பழுது பார்த்த போது, ஜாக்கி நழுவியதால் சோகம்: பஸ்சுக்கு அடியில் சிக்கி மெக்கானிக் பலி

**ஆலப்புழா, ஏப்.14:**

ஆலப்புழா மாவட்டம் காயங்குளம் அடுத்த பட்டோலி மார்க்கெட் அருகே மீனத்தேல் பகுதியைச் சேர்ந்தவர் பிரகாஷ். இவரது மனைவி லதிகா. இவர்களது மகன் கிரி பிரகாஷ் (வயது 23), மெக்கானிக் ஆவார். இவர் கோழிக்கோடு-தேவாலா இடையே இயக்கப்படும் தனியார் பஸ்சை பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டு வந்தார். கோழிக்கோடு அருகே உள்ள சரோவரம் பகுதியில், தனது உதவியாளரான கோழிக்கோட்டைச் சேர்ந்த அஸ்வின் (24) என்பவருடன் சேர்ந்து, பஸ்சை ஜாக்கி வைத்து உயர்த்தி நிறுத்திவிட்டு, அதன் அடியில் படுத்து பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக ஜாக்கி நழுவியது. இதனால் பஸ்சுக்கு அடியில் இருந்த 2 பேர் மீதும் பஸ் விழுந்தது. இதில் கிரி பிரகாஷ், அஸ்வின் ஆகிய 2 பேரும் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்த கோழிக்கோடு போலீசார், தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து ஹைட்ராலிக் ஜாக்கி மூலம் பஸ்சை உயர்த்தி, அதன் அடியில் சிக்கிய இருவரையும் மீட்டு கோழிக்கோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள், கிரி பிரகாஷ் இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். அஸ்வின் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேற்கு வங்கத்தைப் பிரிக்க சதி: மத்திய அரசு மீது மம்தா புகார்



**புதுடெல்லி, ஏப்.14:**

மேற்கு வங்கத்தின் பாங்குரா மாவட்டத்தில் உள்ள சத்னா மற்றும் ஒண்டா ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மம்தா பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: பாஜக அரசு புதிதாக தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வந்து, மேற்கு வங்கத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கத் திட்டமிட்டுள்ளது. மாநிலத்தின் சில பகுதிகளை பீகார் மற்றும் ஒடிசாவுடன் இணைக்க அவர்கள் முயல்கின்றனர். இதன் மூலம் அந்தப் பகுதிகளில் வசிக்கும் வங்க மொழி பேசும் மக்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாவார்கள். பெங்காலிகளின் ஒற்றுமையைச் சிதைக்கவே இந்தச் சதி நடக்கிறது.

திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்த பாஜக ரூ.1,000 கோடி பேரம் பேசியுள்ளது. இதற்கு, ஆம் ஜனதா உன்னயன் கட்சி தலைவர் ஹுமாயூன் கபீர் தொடர்பான வீடியோவே சாட்சியாக உள்ளது. சிறுபான்மையினரின் வாக்குகளைப் பிரித்து திரிணமூல் காங்கிரஸைத் தோற்கடிக்க ரூ.1,000 கோடி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் முன் பணமாக ரூ.200 கோடி கைமாறியுள்ளது.

தேர்தல் நேரத்தில் பாஜகவினர் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்து விலைக்கு வாங்க முயல்வார்கள். வாக்குப் பதிவு முடிந்ததும் அளித்த வாக்குறுதிகளை மறந்துவிடுவார்கள். பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு மம்தா பேசினார்.

# ஜூலை 3-ல் அமர்நாத் யாத்திரை தொடக்கம்: ஏப்.15 முதல் முன்பதிவு

**ஸ்ரீநகர், ஏப்.14:**

இந்தாண்டு அமர்நாத் யாத்திரை ஜூலை 3-ம் தேதி முதல் தொடங்கி ஆகஸ்ட் 28-ம் தேதி வரை 57 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த யாத்திரைக்கான பதிவு நாளை மறுநாள் 15-ம் தேதி முதல் தொடங்குகிறது.

காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தில் 3,888 மீட்டர் உயரத்தில் அமர்நாத் கோயில் அமைந்துள்ளது. இங்கு பனி லிங்கத்தைத் தரிசிக்க ஒவ்வொரு ஆண்டும் யாத்திரை நடைபெறுகிறது. இந்த யாத்திரை ஜூலை 3-ம் தேதி ஆகஸ்ட் 28-ம் தேதி வரை 57 நாட்களுக்கு நடைபெறும் என காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அறிவித்தார்.

# பிகார் முதல்வர் பதவி: நிதீஷ் குமார் இன்று ராஜினாமா?

**புதுடெல்லி, ஏப்.14:**

பிகார் அமைச்சரவைக் கூட்டத்தை செவ்வாய்க்கிழமை (ஏப். 14) நடத்த நிதீஷ்குமார் முடிவு செய்துள்ளார். கடந்த வாரம் நிதீஷ்குமார் வெற்றி பெற்று எம்.பி.யாக பதவியேற்றார்.

அவர் பிகார் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வார் என்றும் பாஜகவைச் சேர்ந்த ஒரு தலைவர் புதிய முதல்வராகப் பொறுப்பேற்பார் என்றும் அரசியல் வட்டாரத்தில் ஊகங்கள் வெளியாகின.

இந்நிலையில் இது தொடர்பாக கேபினட் செயலகத் துறை வெளியிட்ட அறிக்கையின்படி அன்று பகல் 11 மணிக்கு இக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிறகு நிதீஷ்குமார் தனது ராஜினாமா கடிதத்தை ஆளுமர் சையது அடா ஹஸ்னைனிடம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக நிதீஷ்குமாரின் நெருங்கிய சகாவும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் செயல் தலைவருமான சஞ்சய் ஜா, செய்தியாளர்களிடம் கூறுகையில் "ஏப். 13ஆம் தேதிக்குப் பிறகு புதிய அரசை அமைப்பதற்கான நடைமுறைகள் தொடங்கும்' என்று தெரிவித்தார்.

# அனைத்து கட்சி கூட்டத்தை ஏப்.29-ல் நடத்த பிரதமர் மோடியிடம் கார்கே வலியுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.14:**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினேன். சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்குப் பிறகு திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தற்போது நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் தொகுதி மறுவரையறை குறித்து எந்த தகவலும் இடம்பெறவில்லை. இந்த சூழலில் வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்துவது சாத்தியமில்லை. தற்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த தேர்தல்கள் முடிந்த பிறகு ஏப்ரல் 29-ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும்.

அதில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். மகளிருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்டியிருப்பது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி ஆகும்.

இவ்வாறு கார்கே தெரிவித்துள்ளார்.

# Namma Kasa: குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் தளம் @ பெங்களூரு



**பெங்களூரு, ஏப்.14:**

பெருநகரங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று முறையாக அகற்றப்படாத குப்பைகள். இதனால் நகரங்கள் பலருக்கு நரகமாகும். இந்நிலையில், இந்தியாவின் பெருநகரங்களில் ஒன்றான பெங்களூருவில் 'Namma Kasa' மூலம் புதிய முயற்சியை ஜோதிஷ் என்ற இளைஞர் தொடங்கியுள்ளார். இந்த தளம் மூலம் பெங்களூருவின் 243 வார்டுகளில் வசிக்கும் மக்கள் மட்டுமே இப்போதைக்கு தங்களது புகார்களை தெரிவிக்க முடியும். 30 விநாடிகளில் இதை செய்யலாம் என ஜோதிஷ் சொல்லியுள்ளார். இந்த தளத்தின் மூலம் பயனர்கள் தங்களது பெயர் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை எதுவும் தெரிவிக்காமல், தங்கள் இடத்தில் அகற்றப்படாமல் குவிந்திருக்கும் குப்பையை அகற்றுவதற்கான புகாரை தெரிவிக்கலாம். இந்த தளம் கிரவுட்சோர்சிங் முறையில் இயங்குகிறது.

இதில் புகார் தெரிவிக்க விரும்புவோர் தங்களது லொகேஷனை இந்த தளம் அக்சஸ் செய்வதற்கான அனுமதியை தர வேண்டும். அதைத் தொடர்ந்து குவிந்திருக்கும் குப்பையை செல்போனில் படம் பிடித்து இந்த தளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும். அதன்பிறகு அந்த இடம் பெங்களூருவின் எந்த வார்டில் உள்ளது, குப்பையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பாளர்களான பெருநகர பெங்களூரு மாநகராட்சியின் அதிகாரிகள், அந்த வார்டை உள்ளடக்கி உள்ள சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் யார் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய புகார் தயாராகிறது.

அந்த புகார் சார்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு அதற்கு தீர்வு காணப்பட்டுள்ளது குறித்தும் இதிலேயே தெரிவிக்கலாம். அதன் பின்னர் அது 'Resolved ரிப்போர்ட்' என மாற்றப்படுகிறது. இதை அப்படியே பெருநகர பெங்களூரு மாநகராட்சிக்கு நேரடியாகப் புகார் தரும் அம்சமும் உள்ளது குறிப்பிடத்தக்கது. சமுதாயத்தின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த முயற்சியை மேற்கொண்டதாக ஜோதிஷ் தெரிவித்தார். இந்த தளத்தை பயன்படுத்த மிகவும் எளிதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்துள்ளார். இதை இலவசமாக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளார்.

# பாம்பு கடிக்குச் சிகிச்சையளித்த மந்திரவாதி: கங்கையில் 12 மணி நேரம் மிதந்த சிறுவன் பலி

**அம்ரோகா, ஏப்.14:**

உத்தர பிரதேச மாநிலம் அம்ரோகா பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவனை பாம்பு கடித்துள்ளது. அவனது பெற்றோர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் சிகிச்சையளிக்க மந்திரவாதியை நாடியுள்ளனர்.

அந்த மந்திரவாதி, சிறுவனின் உடலில் ஏறிய விஷம் இறங்க வேண்டுமானால், அவனைப் புனித கங்கை நதி நீரில் நீண்ட நேரம் மூழ்கடித்து வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். பாம்பு விஷம் கங்கையில் மூழ்கினால் தானாகவே வெளியேறிவிடும் என்று மந்திரவாதியின் மூடநம்பிக்கை பேச்சை நம்பிய பெற்றோர் அவர்களது மகனை கங்கைக்கு அழைத்துச் சென்றனர்.

மூங்கிலால் செய்யப்பட்ட தற்காலிக மிதவை போன்ற அமைப்பில் சிறுவனை கட்டிவைத்த உறவினர்கள், சுமார் 12 மணி நேரம் அவனை கங்கை தண்ணீரிலேயே மூழ்கி இருக்குமாறு செய்துள்ளனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த வீடியோவில், அசைவற்றுக் கிடக்கும் சிறுவனை சுற்றி ஏராளமான மக்கள் வேடிக்கை பார்ப்பதும், ஏதேனும் அதிசயம் நடக்கும் என காத்திருப்பதும் பதிவாகியுள்ளது.

நீண்ட நேரம் காத்திருந்தும் எந்த அற்புதமும் நிகழவில்லை. முறையான மருத்துவ சிகிச்சை கிடைக்காததாலும், நீண்ட நேரம் கடும் குளிரில் நீரில் இருந்ததாலும் பாம்பு கடித்த அந்தச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான். இச்சம்பவம் குறித்த வீடியோ வைரலானதைத் தொடர்ந்து சிறுவனின் இறப்பு குறித்து நெட்டிசன்கள் பலரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

"மக்களின் அறியாமையை முதலீடாகக் கொண்டு இதுபோன்ற போலி மந்திரவாதிகள் உயிரோடு விளையாடுகிறார்கள். பாம்பு கடிக்கு மருத்துவ சிகிச்சையே முதன்மையானது என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியம்'' என்று பதிவிட்டுள்ளனர். உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் மற்றும் சிகிச்சையளித்த மந்திர வாதியை கைது செய்ய வேண்டும் என்றும் கோரிக்கைகள் தற்போது வலுத்துள்ளன.




## தீவிரவாதியுடன் தொடர்பு உள்ளதாக மிரட்டி 82 வயது மூதாட்டியிடம் ரூ.73 லட்சம் மோசடி



**தானே, ஏப்.14:** மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்தின் கல்யாண் பகுதியை சேர்ந்த 82-வயது மூதாட்டியிடம் மோசடி நபர் ஒருவர் செல்போனில் கடந்த 6-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை போலீஸ் அதிகாரி போல் பேசியுள்ளார்.

அப்போது மூதாட்டியின் போன் எண் பஹல் காம் தாக்குதல் தீவிரவாதியிடம் இருந்ததாக மிரட்டியுள்ளார்.

இந்த வழக்கில் இருந்து மூதாட்டியை விடுவிக்க ஆன்லைன் மூலம் பணம் செலுத்தும்படி கூறியுள்ளார். மோசடி நபர் கூறிய வங்கி எண் களுக்கு 73.3 லட்சம் பணம் அனுப்பியுள்ளார் மூதாட்டி.

தொடர்ந்து பணம் கேட்டதால் சந்தேகம் அடைந்த மூதாட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து மோசடி நபரின் 5 செல் போன் எண்களைக் கண்டுபிடித்து குற்றவாளியை கைது செய்யும் நடவடிக் கையில் போலீஸார் இறங்கியுள்ளனர்.

## ஆந்திரா: ஒருதலை காதலில் சிறுமியை கொன்ற இளைஞர் கைது



**கடப்பா, ஏப்.14:** ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், காஜிபேட்டை அக்ரஹாரம் பகுதியை சேர்ந்த ஸ்ரீநிவாசுலு மகள் (17) பிளஸ் 2 படித்து வந்தார். இவரை ஆஞ்சநேய கொட்டாலா பகுதியை சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் ஒரு தலைபட்சமாக காதலித்து வந்துள்ளார். அதற்கு அந்தப் பெண் மறுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக் கிழமை அப்பெண் வீட்டில் தனியாக இருந்த நேரத்தில் சென்று கத்தியால், கழுத்தை அறுத்து விட்டு தப்பி ஓடிவிட்டார். அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அந்தப் பெண்ணை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அப்பெண் பரிதாபமாக உயிரிழந்தார். கடப்பா போலீஸார் அந்த இளைஞரை சம்பவம் நடந்த அன்றே கைது செய்தனர்.

பெண்ணின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால், காதலனை வேனில் வேறொரு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அப்போது வெங்கடேஷ் தப்பி ஓட முயற்சித்தார். இதனால் வெங்கடேஷை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். தற்போது வெங்கடேஷ், காயம் அடைந்த 2 போலீஸார் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பெரம்பூர் ரயில் நிலையத்தில் தண்டவாளத்தில் கிடந்த பையில் 12 கிலோ கஞ்சா

**பெரம்பூர், ஏப்.14:** பெரம்பூர் ரயில் நிலையத்தில் தண்டவாளத்தில் கிடந்த பையில் இருந்து 12 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். சென்னை பெரம்பூர் ரயில் நிலையத்தில் ரயில்வே போலீசார் ரோந்து சென்றனர். அப்போது நடைமேடை 2 மற்றும் 3க்கு இடையே உள்ள பகுதியில் கிடந்த ஒரு பையில் சோதனை செய்தபோது கஞ்சா பொட்டலம் இருந்தது.

அவற்றை பிரித்து பார்த்தபோது சுமார் 12 கிலோ கஞ்சா இருந்தது. இதன் மதிப்பு 6 லட்ச ரூபாய் என்று தெரிகிறது. அந்த கஞ்சாவை திருவல்லிக்கேணி உள்ள மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குபதிவு செய்து கஞ்சா கடத்திவந்தவர்கள் யார், எதற்காக போட்டுவிட்டு சென்றார்கள் என்று விசாரிக்கின்றனர்.

## ஐடி நிறுவனத்தில் 8 பெண் ஊழியர்கள் பலாத்காரம்: டீம் லீடர் உட்பட 7 பேர் கைது



**நாசிக், ஏப்.14:** இளம் பெண் ஊழியர்களை குறிவைத்து நான்கு ஆண்டுகளாக அரங்கேறிய பாலியல் பலாத்காரம் மற்றும் மதமாற்ற கொடுமைகள் தொடர்பாக போலீசார் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர். மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கில் உள்ள பிபிஓ தனியார் நிறுவனத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக இளம் பெண் ஊழியர்களை குறிவைத்து மேலாளர்கள் மற்றும் உயர் அதி காரிகள் திட்டமிட்ட முறையில் பாலியல் பலாத்காரம் செய்தும், மதமாற்றம் செய்ய சொல்லி மூளைச்சலவை செய்தும் கொடுமைப்படுத்தி வந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் இதுகுறித்து நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு துறையிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விவகாரம் பூதாகரமான நிலையில், கடந்த மார்ச் 26ம் தேதி தியோலாலி போலீஸ் நிலையத்தில் முதல் புகார் அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏப்ரல் தொடக்கத்தில் மும்பை நாகா போலீஸ் நிலையத்தில் ஏழு பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மேலும் எட்டு பேர் புகார் அளித்தனர். தற்போது இந்த வழக்கில் நாசிக் போலீசார் டீம் லீடர்கள் மற்றும் மனிதவள நிர்வாகி உள்ளிட்ட ஏழு ஊழியர்களை அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீது பாலியல் பலாத்காரம், பாலியல் துன்புறுத்தல், மத உணர்வுகளை புண்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் ஒன்பது எப்ஐஆர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தில் இருந்த 40க்கும் மேற்பட்ட சிசிடிவி காட்சிகளை ஆதாரமாக கொண்டு போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து மகாராஷ்டிரா துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறுகையில், 'இந்த விவகாரம் மிகவும் தீவிரமானது. புகார் கிடைத்தவுடன் துரிதமாக செயல்பட்ட நாசிக் போலீசாரை பாராட்டுகிறேன்' என்று தெரிவித்தார்.

## ராணிப்பேட்டை: ஐஸ்கிரீம் கடையில் தீ விபத்து - பெண் உள்பட இருவர் பலி



**ராணிப்பேட்டை, ஏப்.14:** ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தேவி நகர் பகுதியில் செயல்பட்டு வரும் ஐஸ்கிரீம் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் கடை உரிமையாளர் உள்ளிட்ட இருவர் உடல் கருகி உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விபத்து குறித்து தகவல் அறிந்து விரைந்து வந்த ஆற்காடு தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

கடையின் ஷட்டர் மூடப்பட்டிருந்த நிலையில் அதனை உடைத்து, உள்ளே சிக்கி இருந்த இருவரையும் மீட்ட தீயணைப்பு வீரர்கள், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பெண் ஊழியர் சுந்தரி மற்றும் கடை உரிமையாளர் பவன்லால் ஆகியோர் தீயில் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். விபத்து குறித்து ஆற்காடு நகர போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## எதிர்ப்பை மீறி காதலனை கரம்பிடித்த மகள்... மனவேதனையில் பெற்றோர் எடுத்த விபரீத முடிவு







**கோபி, ஏப்.14:** ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள நாகர்பாளையம் சக்தி கார்டனை சேர்ந்தவர் மாதேஷ்வரன் (வயது 45). இவர் அச்சக டிசைனராக வேலை செய்து வந்தார். அவருடைய மனைவி சந்திரா (40). அத்தாணி மின்வாரிய அலுவலகத்தில் போர்மேனாக இருந்தார். இவர்களுக்கு சோனா என்ற மகளும், பாலாஜி என்ற மகனும் உள்ளனர்.

இதில் சோனா கோவையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் கட்டிட வடிவமைப்பாளராக வேலை செய்து வருகிறார். அதே நிறுவனத்தில் சேலத்தை சேர்ந்த தாமோதரன் வேலை பார்த்து வருகிறார். இந்தநிலையில் தாமோதரனுக்கும், சோனாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இது நாளடைவில் காதலாக மாறியது. இவர்களது காதல் விவகாரம் சோனாவின் பெற்றோருக்கு தெரியவந்தது.

மகளின் காதலுக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். மேலும் தாங்கள் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டி வந்துள்ளனர்.

ஆனால் சோனா காதலனை கரம் பிடிப்பதில் உறுதியாக இருந்து வந்தார். நேற்று காலை தாமோதரன் சோனா வீட்டுக்கு வந்துள்ளார். திருமணம் செய்து கொள்வதற்காக சோனாவை அங்கிருந்து அழைத்து சென்றார்.

தங்கள் கண் முன்னே மகள் காதலனுடன் வீட்டை விட்டு சென்றதால் மாதேஷ்வரனும், சந்திராவும் மனமுடைந்தனர். இதனால் "இனி வாழ்வதை விட சாவதே மேல்" என்ற முடிவுக்கு வந்தனர். இதையடுத்து 2 பேரும் விஷம் குடித்து வீட்டில் மயங்கி கிடந்தனர். இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் 2 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் கோபி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட னர். அங்கு 2 பேருக்கும் டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் பயங்கர வெடி விபத்து



**விருதுநகர், ஏப்.14:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே மடத்துப்பட்டியில் ஒரு தனியார் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வந்தது. இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருவதாக கூறப்படுகிறது. இந்த பட்டாசு ஆலையில் வழக்கம் போல இன்று காலை தொழிலாளர்கள் பணியை தொடங்கினர்.

இந்த நிலையில், யாரும் எதிர்பாராதவிதமாக பட்டாசு ஆலையில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்து அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. இந்த வெடி விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தொழிலாளர்கள் ஏராளமானோர் பட்டாசு ஆலையின் உள்ளே சிக்கி இருப்பதாக சொல்லப்படுகிறது. மீட்பு பணி தொடங்கப்பட்ட பின்னரே விபத்தில் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்த தகவல்கள் தெரியவரும். சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் தொடர்ந்து நான்கு முறை பட்டாசுகள் வெடித்துச் சிதறிய சம்பவம் சுற்றுவட்டார கிராம மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

## திருச்சி-காரைக்கால் ரெயில் சேவையில் மாற்றம்



**திருச்சி, ஏப்.14:** திருச்சி கோட்டத்தில் பல்வேறு பிரிவுகளில் பொறியியல் பணிகள் நடைபெறுவதால் பின்வரும் ரெயில்களின் சேவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன.

அதன்படி, திருச்சி ஜங்ஷனில் இருந்து காலை 8.40 மணிக்கு புறப்படும் திருச்சி-காரைக்கால் டெமு ரெயில் (வண்டி எண்: 76820) இன்று (திங்கட்கிழமை) முதல் 18-ந்தேதி வரை பகுதியாக ரத்து செய்யப்படுகிறது.

இந்த ரெயிலானது திருச்சியில் இருந்து திருவாரூர் வரை மட்டுமே இயங்கும்.

மறுமார்க்கமாக காரைக்கால் திருச்சி டெமு ரெயில் (வண்டி எண்: 76819) மேற்கண்ட தேதிகளில் காரைக்கால் திருவாரூர் இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது திருவாரூரில் இருந்து மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு திருச்சி செல்லும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த தகவலை திருச்சி கோட்ட மக்கள் தொடர்பு அதிகாரி வினோத் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் பிரபல நகை கடையில் 25 பவுன் நகைகள் திருட்டு - ஊழியர் கைது

**சென்னை, ஏப்.14:** சென்னை தியாகராயநகரில் உள்ள பிரபல நகைக்கடையில் இருப்பு நகைகளை சரிபார்த்தபோது, சுமார் 25 பவுன் நகைகள் திருட்டு போயிருப்பது தெரியவந்தது. இதுதொடர்பாக நகைக்கடை சார்பில் தேனாம்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

போலீசார் கடையில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது, நகையை திருடியது கடையில் ஊழியராக வேலை பார்த்த சிவாதேவ் (வயது 32) என்று தெரியவந்தது. சிவாதேவ் சென்னை கொளத்தூரை சேர்ந்தவர். கடையில் நீண்ட காலமாக நகை பராமரிப்பாளராக வேலை பார்த்து வந்தார். கடையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக 25 பவுன் நகைகள் வரை அவர் திருடிச் சென்றுள்ளார்.

போலீசார் சிவாதேவை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் நகைகளை திருடியதை அவர் ஒப்புக்கொண்டார். 10 பவுன் நகைகளை திருப்பி கொடுத்துவிட்டார். மீதி நகைகளை திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்ட அவர், திடீரென்று தலைமறைவாகிவிட்டார். இதனால் போலீசார் அவரை தேடி வந்த நிலையில், நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டார்.

## அதிகரிக்கும் வெயிலின் தாக்கம்: எலுமிச்சை கிலோ ரூ.200 ஆக அதிகரிப்பு



**சென்னை, ஏப்.14:** சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வெப்பத்தின் அளவு 100 டிகிரியை தாண்டி பதிவாகி வருகிறது. இதனால் பகல் நேரத்தில் கடும் வெயிலின் தாக்கமும், இரவு நேரத்தில் புழுக்கத்தால் வியர்வையாலும் பொதுமக்கள் சிரமம் அடைந்து வருகிறார்கள்.

காலையிலேயே வெயில் சுட்டெரிக்க தொடங்கி விடுவதால் வாகன ஓட்டிகள் மற்றும் பல்வேறு பணிகளுக்கு செல்லும் பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க வாகன ஓட்டிகள் ஆங்காங்கே சாலையோரம் உள்ள தள்ளுவண்டி கடைகளில் இளநீர், தர்பூசணி, சாத்துக்குடி, எலுமிச்சை மற்றும் கிர்ணி பழச்சாறு உள்ளிட்டவற்றை வாங்கி குடித்து இளைப்பாறி செல்கின்றனர்.

மேலும் பழச்சாறு கடைகளுக்கும் படையெடுத்து வருகிறார்கள். இதனால் தற்போது பழச்சாறு கடைகளில் காலை முதல் மாலை வரை கூட்டம் அலை மோதுகிறது. முக்கிய சாலை சந்திப்புகளில் உடல் சூட்டை தணிக்கும் எலுமிச்சை பழத்துடன் கூடிய சர்பத் கடைகளும் தற்போது அதிகளவில் முளைத்து உள்ளன.

இந்த நிலையில் கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு எலுமிச்சை வரத்து குறைந்து உள்ளதால் அதன் விலை எகிறி உள்ளது. கடந்த வாரம் வரை மார்க்கெட்டில் உள்ள சில்லரை விற்பனை கடைகளில் ஒரு கிலோ ரூ.100வரை மட்டுமே விற்கப்பட்ட எலுமிச்சை பழம் தற்போது ரூ.180 ஆக அதிகரித்து உள்ளது.

தட்டுப்பாடு காரணமாக வெளிமார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில் எலுமிச்சை பழம் கிலோ ரூ200-ஐ கடந்து விற்கப்படுகிறது.

இதுகுறித்து எலுமிச்சை மொத்த வியாபாரி ஒருவரிடம் கேட்டபோது, கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வழக்கமாக ஆந்திர மாநிலம் கூடூர், ராஜம்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து அதிகஅளவில் எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு வருகிறது. தினசரி 10-க்கும் மேற்பட்ட லாரிகளில் 100டன் வரை எலுமிச்சை பழங்கள் விற்பனைக்கு குவிந்து வந்த நிலையில் தற்போது உற்பத்தி நடக்கும் ஆந்திராவில் இருந்து வடமாநிலங்களுக்கு அதிகளவிலான எலுமிச்சை பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதால் கோயம்பேடு சந்தைக்கு வரும் எலுமிச்சை பழங்களின் வரத்து பாதியாக குறைந்து விட்டது.

கடந்த சில நாட்களாகவே சுமார் 40 முதல் 50டன் எலுமிச்சை பழங்கள் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இதனால் எலுமிச்சை பழங்களின் விலை திடீரென 2 மடங்காக அதிகரித்து உள்ளது.

மொத்த விற்பனையில் ஒரு கிலோ எலுமிச்சை பழம் ரூ.150வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சில்லறை விற்பனை கடையில் ரூ.200 வரை விற்பனை ஆகிறது என்றார்.

இதேபோல் கோயம்பேடு பழமார்க்கெட்டில் சாத்துக்குடி, தர்பூசணி மற்றும் கிர்ணி பழங்களின் விற்பனையும் சூடு பிடித்து உள்ளது. மொத்த விற்பனையில் சாத்துக்குடி ஒரு கிலோ ரூ.45வரையிலும், தர்பூசணி பழம் ஒரு கிலோ ரூ.22 வரையிலும், கிர்ணி பழம் ஒரு கிலோ ரூ.25வரையிலும் விற்பனை ஆகிறது.

# ஊட்டி தாவரவியல் பூங்காவில் புதிதாக இசை நீரூற்று, செயற்கை நீர் வீழ்ச்சி, நடைபாதை அமைக்கும் பணிகள் தீவிரம்



**ஊட்டி, ஏப்.14:** நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இருந்த போதிலும் கோடை சீசனான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பல மடங்கு சுற்றுலா பயணிகள் அதிகம் வருவது வழக்கம். அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

அதேபோல் தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகளில் 90 சதவீதம் பேர் ஊட்டியில் உள்ள அரசு தாவரவியல் பூங்காவிற்கு செல்கின்றனர்.

மேலும் ரோஜா பூங்கா, படகு இல்லம் உட்பட பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு செல்லுகின்றனர். ஆண்டுதோறும் கோடை சீசனின் போது ஊட்டி வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. தோட்டக்கலைத் துறை சார்பில் நடத்தப்படும் இந்த மலர் கண்காட்சி ஐந்து நாட்கள் நடக்கும்.

இந்த மலர் கண்காட்சிக்காக பூங்கா முழுவதிலும் பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு அதில், மலர்கள் பூத்துக்குலுங்கும். மேலும் 35 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு நடவு செய்யப்பட்டு அதில் மலர்கள் பூத்தவுடன் அந்த மலர் தொட்டிகளை கொண்டு பல்வேறு அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக சிறிய மற்றும் பெர்னஸ் புல் மைதானங்களில் மலர் அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், மாடங்களில் இந்த மலர் தொட்டுகளை கொண்டு அலங்காரம் செய்யப்படும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்துச் செல்வது வழக்கம்.

இம்முறை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் வகையில் ரூ.8 லட்சம் செலவில் பூங்கா நடுவில் உள்ள குளத்தில் நீரூற்று அமைக்கப்படுகிறது. இந்த நீரூற்று அமைக்கும் பணிகள் துவங்கி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. இது தவிர ரூ.20 லட்சம் செலவில் இத்தாலியன் பூங்கா பகுதியில் இருந்த நடைபாதை செயற்கை நீரூற்றாக மாற்றும் பணிகள் நடந்து வருகிறது.

மேலும், பூங்காவில் நடைபாதை அமைக்கும் பணியும், ஜப்பான் பூங்கா பகுதியில் நடை மேம்பாலம் அமைக்கும் பணிகளும் துரித கதியில் நடந்து வருகிறது. மலர் கண்காட்சிக்கு முன்னதாக இப்பணிகளை முடிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறை மலர் கண்காட்சியை காண வரும் சுற்றுலா பயணிகள் புதிதாக இந்த இசை நீரூற்று, செயற்கை நீர் வீழ்ச்சி மற்றும் அலங்கார நடை மேம்பாலம் ஆகியவைகளை பார்த்தும், பயன்படுத்தவும் முடியும். இது தவிர பல்வேறு மேம்பாட்டு பணிகள் தற்போது பூங்காவில் நடந்து வருகிறது.

# நெல்லை, அம்பாசமுத்திரம் நகைக்கடை கொள்ளை சம்பவத்தில் 3 பேர் கைது

**நெல்லை, ஏப்.14:** நெல்லை, அம்பாசமுத்திரம் நகைக்கடை கொள்ளை சம்பவத்தில் 3 பேரை கைது செய்துள்ளனர். கடந்த 8ம் தேதி நகை கடையின் சுவற்றில் துளையிட்டு ஒரு கிலோ வெள்ளி பொருட்கள், ரூ.1 லட்சம் கொள்ளை அடிக்கப்பட்டது. தென்காசியை சேர்ந்த இசக்கி முத்து, இசக்கி ராஜா மற்றும் ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த மாயாண்டி ஆகியோர் கைது. தனிப்படை அமைத்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 3 பேர் சிக்கினர்

# பஞ்சலிங்க அருவியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



**உடுமலை, ஏப்.14:** புதுக்கோட்டை மாவட்டம் உடுமலை அருகே உள்ள திருமூர்த்திமலையில் பஞ்சலிங்க அருவி உள்ளது. விடுமுறை காலங்களில் இங்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருவார்கள். அடிவாரத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோயிலில் வழிபட்டு, அருவியில் குளித்து செல்வார்கள். அமாவாசை, பவுர்ணமி தினங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில், கடந்த ஒரு வாரமாக அருவியில் மிதமான அளவில் தண்ணீர் விழுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படுகின்றனர். கோடை வெயில் கொளுத்துவதால் சுற்றுலா பயணிகள் மலைவாசஸ்தலங்களுக்கு படையெடுக்கதுவங்கிவிட்டனர்.

அதன்படி, நேற்று திருமூர்த்தி மலையில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். பஞ்சலிங்க அருவியில் குறைந்தளவே தண்ணீர் விழுந்தது. இருப்பினும் அதில் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்தனர்.

# ‘கலைக்கு எதிரான திட்டமிட்ட வன்முறை’ - ‘ஜனநாயகன்’ கசிந்ததற்கு நடிகர் சங்கம் கண்டனம்



**சென்னை, ஏப்.14:** விஜய்யின் ‘ஜனநாயகன்’ திரைப்படம் இணையத்தில் சட்டவிரோதமாகக் கசிந்ததற்குத் தென்னிந்திய நடிகர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திரையரங்கின் இருள் அகன்று திரை திறக்காத முன்பே, ‘ஜனநாயகன்’ என்ற படைப்பின் உயிரைப் பறித்து, அதைக் கள்ளத்தனமாக சமூக வலைத்தளங்களில் அறுத்தெறிந்து, அதன் வருங்காலத்தைக் காரிருளில் மூழ்கடித்த இந்த ஈனச் செயல், சாதாரண சட்ட விதி மீறல் அல்ல, காலங்காலமாக மக்களை மகிழ்விக்கும் கலைக்கு எதிரான திட்டமிட்ட ஒரு வன்முறை.

அந்த வன்முறை தான் ‘ஜனநாயகம்’ என்னும் இரையை விழுங்கியது. இது, கலையை மட்டுமே நம்பி வாழும் தொழிலாளர்களின் உழைப்புக்கு எதிரான கொடூர யுத்தம். மனித மனசாட்சிக்கு எதிரான ஒரு நம்பிக்கை துரோகம். ஏனெனில் ஒரு திரைப்படம் என்பது சில மணித்துளிகள் கண் முன் ஓடும் கற்பனை கதையல்ல. அது ஆயிரம் கனவுகளின் கூட்டுத்தொகை.

ஒவ்வொரு காட்சியின் பின்னணியிலும் வியர்வை, உழைப்பு, பல குடும்பங்களின் வாழ்வாதாரம், ஒரு சமுதாயத்தின் உணர்வு அனைத்தும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அதனால் திரைத்துறை என்பது வெறும் பொழுது போக்கு தொழில் அல்ல. அதை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்க்கை வழியும், சிந்தனைகளை விதைத்து சமூக மாற்றங்களை உருவாக்கும் வலிமைமிக்க தளமும் ஆகும்.

அத்தகைய துறையை சுயலாபம், காழ்ப்புணர்ச்சி அல்லது பழிவாங்கும் மனநிலையால் களங்கப்படுத்த முயல்பவர்கள், சட்டத்தையும், சமூக நெறிகளையும் மீறுபவர்கள். இச்செயலை ஆற்றியவர்கள் எவராக இருப்பினும், அவர்களது அடையாளம் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். நீதித் துறையின் தண்டனை அவர்களைத் தாக்க வேண்டும். அது ஒரு எடுத்துக் காட்டாக நிலைத்திருக்க வேண்டும்.

ஏனெனில் இது ஒரே ஒரு திரைப்படம் சார்ந்த குறை கூறல் அல்ல; இது ஒரு ஒட்டுமொத்த துறையின் மாண்புக்கே விடப்படும் அறைகூவல். திரைத்துறையைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளும், கலைஞர்களும், தொழிலாளர்களும் இணைந்து இத்தகைய செயல்களுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம். இந்த முயற்சியில் தென்னிந்திய நடிகர் சங்கம் முழுமையான ஒத்துழைப்புடன் இணைந்து செயல்படும். இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மின்வாரிய கேங்மேன்கள், களப்பணி ஊழியர்களுக்கு தபால் வாக்கு: தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தல்




**சென்னை, ஏப்.14:** மின்வாரிய கேங்மேன்கள், களப்பணி ஊழியர்களுக்கு தபால் வாக்கு வழங்க வேண்டும் என, தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து, அமைப்பின் பொதுச்செயலாளர் ஜெய்சங்கர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தமிழக அரசின் அறிவிப்பின் படி, மின்வாரிய பணியாளர்களுக்கு பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்களிக்கும் உரிமை மறுப்பு

இந்த பணியாளர்கள் அனைவருமே சொந்த ஊரை விட்டு 200, 300, 500 கி.மீட்டர் தொலைவில் பல்வேறு மின் வட்டங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

2024-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது கேங்மேன் பணியாளர்களுக்கு சிறப்பு பணி என்ற பெயரில் நாடாளுமன்ற தேர்தல் நாளன்று ஒவ்வொரு பிரிவு அலுவலர்களும் பணி செய்திட நிர்பந்தம் செய்ததால், கேங்மேன் பணியாளர்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை மறுக்கப் பட்டது.

மேலும், 2024-ம் ஆண்டு செய்த தவறை வரும் 23-ம் தேதி அன்று நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தல் நாளன்றும், கேங்மேன் பணியாளர்கள் பணி செய்ய பிரிவு அலுவலர்களால் நிர்பந்தம் செய்யப்பட்டு, பணி ஒதுக்கீடு பட்டியல் தயார் செய்யப்படுவதாக தெரிய வருகிறது.

விடுமுறை வழங்க வேண்டும்

அனைத்து மின்விநியோக வட்டங்களில் பணிபுரியும் கேங்மேன் பணியாளர்கள் உள்ளிட்ட ஒரு சில களப் பிரிவு ஊழியர்கள் அனைவருக்கும் வரும் 23-ம் தேதி நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் வாக்களித்திடும் வகையில், தபால் வாக்கு செலுத்த உரிய ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது விடுமுறை வழங்க பிரிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டையில் சாலையில் சென்ற கார் திடீரென தீ பிடித்ததால் பரபரப்பு.!!



**ஏம்பல், ஏப்.14:** புதுக்கோட்டை மாவட்டம் ஏம்பல் என்ற பகுதியில் சாலையில் சென்று கொண்டிருந்த கார் திடீரென தீ பிடித்து பற்றி எரிந்ததால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. புதுக்கோட்டை மாவட்டம் மீமிசலை சேர்ந்த 6 பேர் காரில் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் நடைபெற்ற திருமண விழாவிற்கு சென்று கொண்டிருந்தனர். இவர்கள் சென்று கொண்டிருந்த கார் ஏம்பல் அருகே சென்று கொண்டிருந்த போது அதீத வெப்பம் காரணமாக கார் தீப்பிடித்து எரிந்ததாக கூறப்படுகிறது.

எனினும் சாலையில் சென்று கொண்டிருந்த போதே திடீரென தீ பிடித்த குறிப்பிட்ட காரிலிருந்த 6 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். ஏம்பல் கிராமத்தில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அருகே சென்ற போது எதிர்பாராவிதமாக 6 பேர் சென்று கொண்டிருந்த காரின் முன்பகுதியில் இருந்து திடீரென புகை கிளம்பி உள்ளது.

இதனை தொடர்ந்து அந்த காரில் சென்ற 6 பேரும் உடனடியாக சுதாரித்து கொண்டுள்ளனர். சாலையில் சென்று கொண்டிருந்த காரை உடனடியாக ஓரம்கட்டி நிறுத்திய கார் டிரைவர், மற்றவர்களையும் கீழே உடனடியாக இறங்க சொல்லி விட்டு தானும் கீழே இறங்கி உள்ளார். பின்னர் காரில் இருந்து கீழே இறங்கிய அனைவரும் சற்று தள்ளி காரை விட்டு பாதுகாப்பான தூரம் சென்றனர். அடுத்த சில நிமிடங்களிலேயே அந்த புகையானது தீயாக மாறி மளமளவென கார் முழுவதும் பரவி எரிய துவங்கியது. தாங்கள் வந்த கார் தங்கள் கண் முன்னே முழுவதுமாக தீப்பற்றி எரிய துவங்கியதை பார்த்த 6 பேரும் செய்வதறியாது அதிர்ச்சி அடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு துறையினர், கடுமையாக பற்றி எரிந்த தீயை அணைக்க முயன்றனர். எனினும் தீ பிடித்த கார் அதற்குள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தது. காரில் பயணித்த 6 பேரும் சரியான நேரத்தில் கீழே இறங்கியதால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. காரின் முன்பகுதியில் இருந்து திடீரென புகை வந்ததும் காரில் இருந்தவர்கள் முன்கூட்டியே இறங்கியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாகசம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தகவல் தெரிவித்து உள்ளனர். இதனிடையே இந்த தீ விபத்து எதனால் ஏற்பட்டது என்பது குறித்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.




# தமிழக தேர்தல் பிரசாரத்தை புறக்கணிக்க ராகுல்காந்தி முடிவா? - பரபரப்பு தகவல்கள்



**சென்னை, ஏப்.14:** தமிழகத்தில் வரும் 23-ந் தேதி (வியாழக்கிழமை) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 9 நாட்களே இருக்கும் நிலையில், அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திரமோடி இதுவரை 3 முறை தமிழகம் வந்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்து 15-ந் தேதி நாகர்கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், 18-ந் தேதி கோவையில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று பேசுகிறார். இதில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

அதேபோல், ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பொதுக்கூட்டத்தை நாளை மறுநாள் (15-ந் தேதி) சேலத்தில் பிரமாண்டமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதில், பங்கேற்க வருமாறு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்திக்கு தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ராகுல் காந்தி தரப்பில் இருந்து சாதகமான பதில் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், தி.மு.க. தலைமை அதிருப்தியில் இருக்கிறதாம்.

சட்டசபை தேர்தலுக்கான கூட்டணி பேச்சு வார்த்தை நடந்தபோதே, தி.மு.க. - காங்கிரஸ் இடையே பிரச்சினை எழுந்தது. இதனால், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய காங்கிரஸ் தலைமை பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டது. இதற்கு ராகுல்காந்தி ஆதரவு தெரிவித்த அதே நேரத்தில், அவரது தாயாரான சோனியாகாந்தி இதற்கு மறுப்பு தெரிவித்தாராம். அதன்பின்னரே, தி.மு.க.வுடனான கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது.

ராகுல்காந்தி தொடர்ந்து அதிருப்தியில் இருந்து வருவதால், தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தை புறக்கணிக்க முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, புதுச்சேரி தேர்தல் பிரசாரத்திற்கு ராகுல்காந்தி, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஒரே நாளில் பிரசாரத்திற்கு சென்றபோதும், ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளவில்லை. வெவ்வேறு நேரத்தில் பிரசாரம் செய்தனர். கேரள தேர்தல் பிரசாரத்திற்காக செல்ல, சென்னை மற்றும் கோவைக்கு ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி வந்தபோதும்கூட பிரசாரம் எதுவும் மேற்கொள்ளவில்லை.

தற்போது, தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரீஷ் ஷோடங்கர், ராகுல்காந்தி பிரசாரத்திற்கு வருவார் என்று கூறிவந்தாலும், மற்றொரு மேலிட பொறுப்பாளரான முகுல் வாஸ்னிக் அதை உறுதிப்படுத்தவில்லை. அதனால், ராகுல்காந்திக்கு நெருங்கிய நண்பரான கமல்ஹாசன் மூலம் அழைப்பு விடுக்க தி.மு.க. தலைமை முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது.

# அதிமுகவுடன் கூட்டணி வைத்திருந்தால் அரசியலில் தேர்தல் களமே மாறி இருக்கும் - திருமாவளவன்

**செங்கல்பட்டு, ஏப்.14:** செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த புதுப்பட்டினத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செய்யூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சிந்தனை செல்வனை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு பானை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.

பிரசாரத்தில் திருமாவளவன் பேசுகையில், இந்த தொகுதியில் நமக்கு எதிராக போட்டியிடும் அதிமுக வேட்பாளர் என்ன செய்யப் போகிறோம் என்ற திட்டங்களை கூறி ஓட்டு கேட்காமல் நான் வெற்றி பெற்றால் பத்தாயிரம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுப்பேன் என கூப்பன் கொடுத்து ஓட்டு கேட்கிறார்.

இங்கே ஒரு நடிகர் இருக்கிறார் கட்சி தொடங்கிய சந்திக்கின்ற முதல் தேர்தலிலே முதலமைச்சர் ஆக வேண்டும் என ஆசைப்படுகிறார். பதவிக்காக மட்டுமே வருகிறார் பல ஆயிரம் கோடிகளை விட்டுவிட்டு மக்கள் பணி செய்ய வந்துள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் பதவிக்காக மட்டுமே வந்திருக்கிறார்கள்.

விடுதலை சிறுத்தைகள் நினைத்து இருந்தால் எத்தனையோ கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டணி அமைத்திருக்க முடியும். ஆனால் நாங்கள் ஏன் திமுகவுடன் கூட்டணி வைத்து இருக்கிறோம். அதுதான் கொள்கை பிடிப்பு. அதிமுக உடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் அதிக சீட்டு கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் கிடைத்த அத்தனை வாய்ப்புகளையும் தவிர்த்து கொள்கை பிடிப்புக்காக நின்ற கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி.

கடந்த மூன்று ஆண்டுகளாக அதிமுகவுடன் கூட்டணி அமைக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது. அப்படி அதிமுகவுடன் நான் கூட்டணி வைத்திருந்தால் எடப்பாடி பழனிசாமி பிஜேபியுடன் கூட்டணி வைத்திருக்க மாட்டார். இன்று அரசியலில் தேர்தல் களமே மாறி இருக்கும். அதிமுகவில் உள்ள எடப்பாடி பழனிசாமி பிஜேபியுடன் கூட்டணி வைத்ததற்கு காரணம் உள்ளதா? ஒன்றுமே இல்லை.

ஆகையால் செய்யூர் தொகுதியில் போட்டியிடும் நமது வேட்பாளரை அனைவரும் ஆதரித்து பானை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய அவர், தப்பி தவறி ஒரு வேளை எடப்பாடி பழனிசாமி முதலமைச்சரானால் அவரின் பதவி இரண்டு மாதங்களுக்குள் பறிக்கப்படும். அவருக்கு பதிலாக எச் ராஜாவையோ அல்லது அண்ணாமலையையோ அல்லது பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனையோ தமிழக முதல்வராக தேர்வு செய்யும் நிலைக்கு பாஜக செல்லும். அதனால் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியை தவிர்த்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணியை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

செய்யூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக சிந்தனைச் செல்வனுக்கு பானை சின்னத்தில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM